நன்னூல் உரை வளம்

20

தமிழ் இலக்கணம்

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

நன்னூல் உரைவளம் (தொகுதி-20)

தமிழ் இலக்கணம்

மற்றும்

இந்நூலிற்கு C. அருணாசலம் அவர்கள் செய்த ஆங்கில மொழிபெயர்ப்புகள்

TAMIL GRAMMAR

ஆகிய இரு நூல்களின் திரட்டு

பதிப்பாசிரியர்

முனைவர் இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

இரண்டாம் முதன்மைச் சாலை,

தரமணி, சென்னை—600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Tamil̲ ilakkaṇam (Vol. 20)**
Author	:	Dr. R. Kannan Associate Professor Dept. of Tamil Language Presidency College, Chennai - 5
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	708
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2010
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	11 Point
No. of Pages	:	216
No. of Copies	:	1200
Price	:	Rs. 95/- (Rupees Ninety five only)
Printed by	:	Sri Venkateswara Offset New No. 47, Rajanga Mathya Street Vadapalani, Chennai - 600 026. Phone : 23621409
Subject	:	Tamil Grammar

முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 113

அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரை வளத்தினைஎம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப்புலவர், வை.மு.சடகோப ராமானுசா சாரியார், சே.கிருட்டிண மாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல் லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் இரா.கண்ணன், சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரைவளத்தின் பதிப்புப்பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

கரு.அழ.குணசேகரன்

சென்னை – 113.

12.01.2011.

முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக் கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப் படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண் டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக் கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலைநாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமை யானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன. வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன. இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரைவளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப் பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதி,நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரைவளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலை நாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளை யேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

நன்னூல் உரைவளத் திரட்டினை வெளியிட நிதியுதவி கோரி தமிழக அரசினை நாடியபோது உலகத் தமிழாராச்சி நிறுவனம் மூலம் வெளியிட அந்நிறுவனத்திற்குப் பரிந்துரைத்த ***தமிழக நிதியமைச்சர், இனமானப் பேராசிரியர் மாண்புமிகு க. அன்பழகன்*** அவர்களின் அருளுள்ளம் எந்நாளும் எம்மால் நினைவு கூரத்தக்கது. அவ்வாறே,இவ்வுரைவளத் தொகுதிகள் அனைத்தும் வெளிவரப் பரிந்துரைத்துத் துணை நின்ற, ***தமிழகத் துணைமுதல்வர் மாண்பமை டாக்டர் மு.க.ஸ்டாலின்*** அவர்களின் பேருதவிக்கு உளமார்ந்த நன்றியினை உரித்தாக்குவதே யன்றி எளியேன் செய்ய இயல்வதுதாமென்?

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு.அழ.குணசேகரன்*** அவர்களும், துணை இயக்குநர் **திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியன்** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை **முனைவர் ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

10.11.2010

இரா.கண்ணன்.

சென்னை–55

தமிழ் இலக்கணம்

எழுத்ததிகாரம் முதலாவது எழுத்தியல்

எழுத்துக்கண் மொழிக்கு முதற்காரணமாய் வருவன.அவை எண், பெயர், முறை, மாத்திரை, பிறப்பு, உருவம், முதனிலை, இறுதிநிலை, இடைநிலை, போலி இவைகளையுடையன.

எண்ணாவது

எழுத்தின்றொகை, தமிழ்ப்பாஷையின் எழுத்துக்கள் 40
அவை முதலெழுத்தெனவும், சார்பெழுத்தெனவுமிரு வகைப்படும்.
அவற்றுள் முதலெழுத்து – 30
சார்பெழுத்து – 10

பெயராவது

முதலெழுத்து உயிரும் மெய்யுமெனவிருவகைப்படும்.
அவையாவன அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, இப்பன்னிரெண்டுமுயிரெழுத்துக்கள்.

எழுத்தியல்

அப்பன்னிருயிரும் குறில், நெடில், சுட்டு, வினா, உவமை எனப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.அவற்றுள் குறிலைந்து. அவையாவன, அ, இ, உ, எ, ஒ
நெடில் 7. **ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஔ**

குறிலெழுத்துள் சுட்டு 3. அஃது அகச் சுட்டெனவும், புறச்சுட்டெனவும் இரு வகைப்படும்.

அகச் சுட்டின் உதாரணம்

அவன்,
இவன்,
உவன்

புறச் சுட்டின் உதாரணம்

அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்
மற்றவிரண்டும் வினாவும், உவமையுமாம், உ–ம்.
எ–எவன்? வினா
ஒ ஒத்தான். உவமை.

நெட்டுயிர் ஏழனுள் ஆ, ஓ, மொழிக்கீற்றினும் ஏ மொழிக்கு முதலிலும் வந்து வினாப் பொருளைத் தரும். உ–ம் :–

அவனா,அவனோ, ஏது, அவனே

TAMIL GRAMMAR

ORTHOGRAPHY CHAPTER I-OF LETTERS

Letters are the first principles of words, (Refer to the Sootherem or Verse 3 of the Grammar, நன்னூல்)

They have Number, Names, Order, Measure or Quantity of time, Formation,Figure, the quality of standing in the beginning, middle, and end of words, and of supplying the place of other letters, asSootherem 2 describes,

OF NUMBER

There are 40 letters in the Tamil language-(Vide Soo.3) They are divided into two different classes, Simple and Compound.Simple letters are thirty. Compound............ten.

OF NAMES

Simple letters are Vowels and Mute Consonants-(Vide Soo.4.)AS, **a, a, e, ee, u, u, e, ey, y, o, o, ou**,These Twelve are Vowels-(Soo.8.)OF LETTERS

Those twelve vowels are divided into short and long ones; and these into Demonstrative, and Interrogatory, and Comparative ones,The short vowels are five, viz,,**a, i, u, e, o**,-(Soo.9) The long vowels are seven, viz,,**a, ee, u, ey, y, o, ou**,-(Soo.10)

Of the five short vowels, three are divided into two kinds of demonstratives, one of which kinds is a demonstrative when it forms a member of a word, as,That man. This man. That man at a remote place.The others are demonstratives standing by themselves, without being members of any word.(See the Examples shown in the Tamil-Soo.11)The other two short vowels are divided into interrogatory and comparative ones.

The interrogative is "எவன்" which man?

And comparative is "ஒத்தான்" as, He is compared. (Soo.12 AND 52)

Of the seven long vowels, two, a and o, become interrogatories each at the end of a word; and the other letter a ஏ at the beginning and end of word, as in the following example:

Is it that man?
Where have you got it?
Is it that man?-(Soo.12)

மெய்யெழுத்துக்கள் பதினெட்டாவன

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

அப்பதினெட்டு மெய்யும் வல்லினம், மெல்லினம், இடையினம் என வகுக்கப்பட்டிருக்கின்றது.

க், ச், ட், த், ப், ற் இவ்வாறும் வல்லினம்.

ங், ஞ், ண், ந், ம், ன் இவ்வாறும் மெல்லினம்

ய், ர், ல், வ், ழ், ள் இவ்வாறும் இடையினம்

முறையாவது

அ முதல் ஔ ஈறாகவும் க முதல் ன ஈறாகவும் நெடுங்கணக்கினுட் கிடக்கையே முறையாம்.முதலினுமீற்றினும் வினாவாம். உ—ம் .அவனா, அவனோ, ஏது, அவனே

மாத்திரையாவது

இமைப்பொழுதும் நொடிப் பொழுதும் ஒரு மாத்திரைகளவாம்.

உயிர் நெடிலுக்கும் உயிர்மெய்நெடிலுக்குந் தனித் தனி மாத்திரை இரண்டு.உயிர்க்குறிலுக்கும், உயிர் மெய்க்குறிலுக்குந் தனித் தனி மாத்திரை ஒன்று. தனி மெய்க்கு மாத்திரை அரை.நெட்டுயிரும் மெய்யும் இசையிலும் அழைத்தலிலும் பண்டமாற்றுதலிலுமுற் கூறிய மாத்திரையினு மிகுந் தொலிக்கும்.

OF LETTERS

Male consonants are eighteen in number, viz,,

க் - k	த் - like soft th.	ல் - l soft
ங் - ng	ந் - n	வ் - v
ச் - s	ப் - p and be	ழ் - rl
ஞ் - ng	ம் - m	ள் - l hard
- d hard	ய் - y	ற் - r hard
ண் - n hard	ர் - r soft	ன் - n soft

(Soo. 8)

The eighteen Mute Consonants are divided into six hard, six soft, and six middle sounding letters,

The six hard sounding letters are,

க் - k	த் - th	
ச் - s	ப் - p	
ட் - d	ற் - r	(Soo.13)

The six soft sounding letters are,

ங் - ng	ந் - n	
ஞ் - gn	ம் - m	
ண் - n	ன் - n	(Soo.14)

The six middle sounding letters are,

ய் - y	வ் - v
ர் - r	ழ் - rl
ல் - l	ள் - l hard.(Soo.15)

OF THE ORDER OF THE LETTERS

The list which is given above of all the letters is prepared with reference to their proper order,-(Soo.18)

OF MEASURES

The Natives call the length of time for the pronunciation of the "மாத்திரை", Matherei, i,e, Measure, which they define by a single twinkling of the eye or a snap of the fingers,-(Soo.45,)

The long vowels and the long consonants have two Mathereis each,The short vowels and the short consonants have one Matherei each, and the mute consonants a half Matherei each,-(Soo.44)The long vowels and long consonants exceed their measure of time in singing different notes, in the Vocative case, and in crying things for sale,-(Soo.46,)

பிறப்பாவது

உந்தியினின்றெழுநாதம் மார்பு, கண்டம், மூக்கு என்னு மூன்றிடத்தையும் பொருந்தி அண்ணம், நா, பல்லு, உதடு என்னும் நான்கின் முயற்சியால் வெவ்வேறாகத் தோன்றுவது எழுத்துக்களுடைய பிறப்பாம்.

உயிர் பன்னிரெண்டும், இடையினம் ஆறும் கண்டத்திலும், வல்லினம் ஆறும் மார்பிலும், மெல்லினம் ஆறும் மூக்கிலும் பிறக்கும்.அவற்றுள்,

அ, ஆ அங்காத்தலினாற் பிறக்கும்.

அவ்வங்காப்புடன்

இ, ஈ, எ, ஏ, ஐ, பல்லடியை நாவிளிம்பு பொருந்தப் பிறக்கும்.

உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ் குவியப் பிறக்கும்.

க், ங் முதனாமுதலண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும்.

ச், ஞ் இடைநா இடையண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும்.

ட், ண், நுனிநா நுனி அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும்.

த், ந், பல்லடியை நா நுனி பொருந்தப் பிறக்கும்.

ப், ம் இரண்டுதடுகளும் பொருந்தப் பிறக்கும்.

ய், அடி நா அடியண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும்.

ர், ழ் அண்ணத்தை நுனி நா தடவப் பிறக்கும்.

ல், பன் முதலை நாவிளிம்பு புடைத்தொற்றப் பிறக்கும்

.வ், மேற்பல் கீழுதட்டைப் பொருந்தப் பிறக்கும்.

ள், அண்ணத்தை நாவிளிம்பு புடைத்துத் தடவப் பிறக்கும்.

ற், ன், அண்ணத்தை நுனிநா மிகப் பொருந்தப் பிறக்கும்.

சார்பெழுத்துக்கள்

முற்றாய்தமொன்று தவிர மற்ற சார்பெழுத்துக்களுக்குத் தத்தம் முதலெழுத்துக்களைச் சார்ந்து வருதலே பிறப்பாதலா லவைகளின் பெயரையும் அளவையும் காட்டுதும்.

OF THE FORMATION OF THE LETTERS

The letters are engendered by the operations of the breath in the breast, throat, and nose, and sounded by the actions of the organs of speech, viz, the palate, tongue, teeth, and lips,-(Soo.19)

The twelve vowels and the six middle sounding letters are guttural; the six hard- sounding letters have their origin in the breast; and the six soft-sounding letters in the nostrils,-(Soo.20)அ, ஆ, are sounded at the aperture of the mouth. (Soo.21)இ, ஈ, எ, ஏ, ஐ, are sounded by the operation of the borders of the tongue upon the jaws or grinders, with the aperture of the mouth,-(Soo.22)உ, ஊ, ஒ, ஓ, ஔ are sounded by the bending of the lips-(Soo.23)க், ங், are pronounced by the pressure of the lower part of the tongue upon the palate.ச், ஞ், are produced by the pressure of the middle part of the tongue upon the middle palate,ட், ண், are produced by the pressure of the tip of the tongue upon the forepart of thepalate, - (Soo.24.) த், ந், are pronounced by the pressure of the tip of the tongue on the bottom of the lower teeth,-(Soo.25)ப், ம், are pronounced when both lips are closed,-(Soo.26)ய் is pronounced by the lower tongue touching the palate,-(Soo.27)ர், ழ், are pronounced by moving the tip of the tongue lightly along the palate,-(Soo.28)ல் is sounded by the pressure of the tip of the tongue on the lower part of the upper teeth,-(Soo.29)வ் is produced by the pressure of the upper teeth upon the under lip,-(Soo.30)ள் is sounded by the pressure of the borders of the tongue upon the palate,-(Soo.29)ற் ன் are sounded by the pressure of the tip of the tongue upon the palate,-(Soo.31)

OF THE COMPOUND LETTERS

It is needless for the Grammarian to explain how the compound letters (excepting one of them, called ஆய்தம்) are pronounced; because their respective sounds are mixed with the simple letters which which they are combined, Their names and measures are these:

(See Soo.32)

உயிர்மெய் ,(ஃ)ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம்,குற்றியலிகரம்,ஐகாரக் குறுக்கம்,ஔகாரக் குறுக்கம்,மகரக் குறுக்கம்,ஆய்தக் குறுக்கம்.

I. உயிர்மெய்

மெய்பதினெட்டுமுயிர் பன்னிரண்டும் புணருமிடத்து மெய்யொலி முன்னுமுயிரொலி பின்னுமாய்க் கலந்தோசையாக வுயிர்வடிவை யொழித்து மெய்வடிவே வடிவாகி வரும். அவை:–

ka க	kā கா	kĭ கி	kī கீ	kŭ கு	koo கூ	kĕ கெ	kē கே	kei கை	kŏ கொ	kō கோ	koū கௌ	க்
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
sa ச	sā சா	sĭ சி	sī சீ	sŭ சு	soo சூ	sĕ செ	sē சே	sei சை	sŏ சொ	sō சோ	soū சௌ	ச்
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ	ட்
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
tha த	thā தா	ti தி	thī தீ	thŭ து	thoo தூ	hĕ தெ	thē தே	thei தை	thŏ தொ	thō தோ	thoū தௌ	த்
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	ந்
pa ப	pā பா	pĭ பி	pī பீ	pŭ பு	poo பூ	pĕ பெ	pē பே	pei பை	pŏ பொ	pō போ	poū பௌ	ப்
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	ம்
ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ	ய்
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ	ல்
வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ	ற்
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ	ன்

The Consonants.Three Circles called by Tamil Writers *Aitham*.Assistants to the vowels adopted to increase their own measure of sounds.Assistants to the mute consonants adopted for a similar purpose.உ, shortened in its measure or quantity of time which it has when sounded.இ, shortened in its measure or quantity of time.ஐ, shortened in its measure or quantity of time.I. ஔ, is shortened in its measure or quantity of time, ம் is shortened in like manner,Three shortened Circles or ஆய்தம்- (See. 5.)

OF THE CONSONANTS

When the twelve vowels in union with their bodies or consonants are pronounced, the sounds of the consonants precede, and those of the vowels follow them; and they moreover assume the figures of the consonants, losing their own altogether, Consonants are 216 in number,-

(Soo. 34 & 54)

II. ஆய்தம்

நாதமானது தலையிற் பொருந்தி அங்காத்தலினாற் பிறக்கும். அதற்கு மாத்திரை அரையாம்.அது குற்றெழுத்துக்கு முன்னும் வல்லெழுத்துக்குப் பின்னுமாக வரும்.உதாரணம்– எஃகு, கஃசு, அஃது

III. உயிரளபெடை

செய்யுளிலோசை குறைந்தால் நெட்டுடெழுத்துக்களேழும் குற்றெழுத்துக்களைந்துடன் புணர்ந்து அவ்வோசையை நிறைக்கும்.

உ–ம். வா–அகை. ஈ–இகை. ஊ–உகை.

மே–எகம். ஐ–இயம். ஓ–தொகை. ஔ–உவியம் என வரும்.

IV. ஒற்றளபெடை

செய்யுளிலோசை குறைந்தால் ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள். என்னும் பத்து மெய்யெழுத்துக்களுமிரட்டித்து அவ்வோசையை நிறைக்கும். உ–ம்.

மங்ங்கலம்–மஞ்ஞ்சு–மண்ண்ணு பந்ந்து.

V. குற்றியலுகரம்

ஆய்தம் ஔவொழிந்த உயிர் 12. வல்லினம் 6 வ ஒழிந்த இடையினம் 5. இவற்றின் முன் ஒரெழுத்து முதலாகத் தொடரப்பட்ட மொழிக்கீற்றில் வல்லினத்தை யூர்ந்து (உ) வருமாயின் அது குறுகி அரைமாத்திரைபெறும். உ–ம். எஃகு வரகு பலாசு இறும்பூது அக்கு விளையாட்டு பஞ்சு சால்பு.

VI. குற்றியலிகரம்

குற்றியலுகரத்தின் பின் ய வருமாயின் அவ்வுகரம் இகரமாகத்திரிந்து குறுகும்.

மியாவென்னும் முன்னிலை யசைச்சொல்லில் மகரத்தின் மேலேறிய இகரமுங் குறுகும். இவ்விரண்டும் அரை மாத்திரை பெறும். உ–ம். எஃகு யாது எஃகியாது வரகுயாது வரகியாது கேண்மியா சென்மியா.

VII. ஐகாரக்குறுக்கம்

ஐ தனியே நிற்கும்பொழுதன்றி மொழிக்கு முதலிடை, கடையென்னுமூவிடத்தினும் வரும்பொழுது மொழிக்கு முதலில் ஒன்றரைமாத்திரையும் இடையிலும் கடையிலும் ஒருமாத்திரையுமாகக் குறுகும்

உ–ம்:–

வையகம் மடையன் குவளை.

The letter Aitham (ஃ) is engendered by the operation of the breath in the roof of the mouth, and sounded by the aperture of the month, It has a half Matherie

It always appears before the short vowels and after the hard sounding consonants, See the example given in Tamil,-

(Soo. 35)

OF ASSISTANTS TO THE MUTE CONSONANTS

To supply the defect of voice in verses, the ten mute consonants each double their number to increase their own measure of time; and they have thereby one Matherei each, See the example in Tamil (Soo.20, இலக்கண விளக்கம்.)

OF THE உ SHORTENED IN ITS MEASURE OF TIME,

If the vowel உ have as its bodies the six hard sounding consonants in the words composed of one or more letters; or if it follow the Aitham; the eleven vowels except ஔ; the six hard sounding mute consonants; the six soft sounding mute consonants; and five middle sounding mute consonants, except வ்; it is shortened in its measure of time, and its one Matherei is thereby reduced to a half, as the preceding letter takes the accent-(see,39)

OF THE இ SHORTENED IN ITS MEASURE OF TIME,

The shortened உ is changed into இ retaining its shortened measure of time when it follows the consonant ம்.In this instance, and when the proper இ follows the words கேண்மியா and சென்மியா, its one *Matherei* is reduced to a half, See the example in Tamil-(See.38)

OF THE SHORTENED ஐ

The long vowel ஐ is shortened in its measure of time in the beginning, middle, and end of a word, except when it stands by itself, Its two *Matheries* are thereby reduced to one and a half in the beginning of a word, and one when in the middle and end of a word, See the examples in Tamil-(See,40)

VIII. ஔகாரக்குறுக்கம்

ஔ தனியே நிற்கும்பொழுது ஒன்றரைமாத்திரையாகக் குறுகும்.

உ–ம். ஔவை.

IX.மகரக்குறுக்கம்

ல் ள் திரிந்த – ன் ண் முன்னும் வ் மேலும் வரும். ம் – கான் மாத்திரையாகக் குறுகும்.

உ–ம்.:–

போலும் – போன்ம்.

மருளும் – மருண்ம்.

வரும்வணிகன் – என வரும்.

X. ஆய்தக்குறுக்கம்

குறிலைத் தொடர்ந்த ல், ள். மெய்கள் முன் தகரம்வரின் ஆய்தமாகத்திரிந்து கான்மாத்திரையாகக் குறுகும்.

உ–ம்.	கல் + தீது	– கஃறீது
	அல் + திணை	– அஃறிணை
	முள் + தீது	– முஃடீது. என வரும்.

உருவமாவது

எழுத்துக்களுடைய வடிவங்களை நெடுங்கணக்கில் முன் காட்டியிருப்பதால் அவற்றை யிவ்விடத்தில் விவரிக்கிறதவசிய மற்றதாயிருக்கின்றது.

மொழிக்கு முதலில் வருமெழுத்துக்கள்.

உயிர் 12ம், க், ச், த், ந், ப், ம் வருக்கங்கள் 6ம் (வ) வருக்கத்தில் 8ம் (ய) வருக்கத்தில் 6ம் (ஞ) வருக்கத்தில் (4ம், ஙவும்) மொழிக்கு முதலாவனவாம்.

உ–ம்.:–

உயிர், அணி ஆடை இலை ஈயம் உரல் ஊமை எலி ஏணி ஐயம் ஒளி, ஓடை, ஔவியம்.

க

கலை காளி கிளி கீரி குயில் கூகை கெண்டை கேள்வி கைதை கொடை கோடை கௌவை.

ச

சங்கு சாந்து சிங்கம் சீனம் சுரை சூரை செக்கு சேவல் சைவம் சொல் சோறு சௌரி.

த

தடி தாது திரை தீவு துணை தூது தெரு தேன் தையல் தொடி தோணி தௌவை.

ந

நரி நாரை நிதி நீதி நுதி நூல் நெல் நேர் நைதல் நொச்சி நோன்பு நௌவி.

OF THE SHORTENED ஔ

The long vowel ஔ is shortened in its measure of time when in the beginning of a word, except when it stands by itself, It two *Mathereis* are thereby reduced in one and a half, See the example in Tamil-(See,40),

OF THE SHORTENED ம

The consonant ம் loses its quantity of time when it follows words of which the termination or ள் is changed grammatically into ள் or ண்; and likewise when it precedes the consonant வ், In both these cases the ம் is, reduced to a quarter Matherei, See the example in Tamil,-(Soo.41)

OF THE SHORTENED (ஃ) ஆய்தம்.

When the mute consonants ல் and ள் stand next to the short letters, and precede த், they are changed into Aitham, and then its *Matherei* is reduced to a quarter, See the example in Tamil-(See. 42.)

I. OF THE FORM OF THE LETTERS

As a correct list of all the letters has already been given at page we of this work, it will not be necessary to say anything more on this subject.

II. OF THE LETTERS WHICH ARE ADAPTED TO STAND IN THE BEGINNING OF A WORD.

Words may begin with twelve vowels; with the whole of the letters under the heads of six consonants- க், ச், த், ந், ப், ம்; with eight letters under the head வ்; with six under the head ய்; with four under the head ஞ்; and with the consonant ங். See the examples in the Margin

(Soo 47, 48, 49, 50 and 51),

ப

படை பாவை பிணி பீர்க்கு புலி பூளை பெடை பேய் பையல் பொன் போர் பௌவம்

ம

மலை மாலை மிடி மீன் முலை மூலை மெய் மேல் மையல் மொழி மோர் மௌவல்

வ

வளை வாள் வினை வீணை வெள்ளி வேல் வையம் வௌவால்.

ய

யமன் யானை யுகம் யூகம் யோகம் யௌவனம்.

ஞ

ஞமலி ஞாளி ஞெண்டு ஞொள்கல்

ங

அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் என வரும்.

மொழிக்கிறுதியில் வருமெழுத்துக்கள்

உயிர் மெய் நெடில்களில் 6ம் உயிர் மெய்க்குறில்களில் 4ம், ஞ் ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், என்னுமெய்கள் 11ம் மொழிக்கீறாம். **உ–ம்.**

உயிரீறு பலா குரீ ஆடு சே–பனை சோ விள் மணி கடு.

மெய்யீறு. உரிஞ் மண் பொருந் திரும் பொன் காய் வேர் பால் தெவ் கூழ்கள்.

ஒ நகர மெய்யுடனேமாத்திரமீறாம்

உ–ம்.:– நோ.

ஔ, க், வ். என்னுமிரண்டுமெய்யுடனே மாத்திரமீறாம்.

உ–ம். கௌ வௌ.

மொழிக்கிடையின் மயங்குமெழுத்துக்கள்.

மெய்களுள் க், ச், த், ப், நான்குந்தன்னோடு தானே கூடும். உ–ம். கொக்கு அச்சு கட்டு துப்பு.

ர், ழ். பிறிதோடே கூடும். உ–ம் சேர்வு வாழ்வு

மற்ற 12 மெய்களுமாகிய ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல் வ், ள், ற், ன். கள் அடியில் வருகிறபடிக்குத் தன்னொடும் பிறிதொடுங்கூடும்.

ங் என்னுமெய்யெழுத்து ங், க். என்னுமெழுத்துக்களுடன் மயங்கும். **உ–ம்** அங்ஙனம் அங்கு.

ஞ் – ஞ், ச, ய. என்பவைகளுடன் மயங்கும். உ–ம். மஞ்ஞை மஞ்சு உரிஞ்யாது.

ட் – ட், க, ச, ப. இவைகளுடன் மயங்கும். உ–ம். சுட்டு கட்கம் கட்சி திட்பம்.

ண் – ண், க், ச், ஞ், ப், ம், ய், வ் இவைகளுடன் மயங்கும்.

உ–ம்.:–

கண்ணன் வெண்சாமரை நுண்ஞாண் பண்பு பெண்மை மண்யானை மண்வெட்டி.

OF THE LETTERS WHICH ARE ADOPTED TO STAND IN THE END OF WORDS

Words may end with six long and four short of the twelve vowels when united with their bodies or consonants; கா, கீ, கூ, கெ, கை, கொ, and with eleven consonants: ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், as can be seen in the example given in the Margin,-(See,52 and 53)The vowel ஒ, when united with the consonant ந் can stand in the end of a word.The vowel ஔ, when joined to the consonants க் and வ் can stand as the termination of words.

OF THE LETTERS WHICH CAN MEET TOGETHER IN THE MIDDLE OF WORDS

க், ச், த், ப், among the mute consonants, can stand in the middle of words, being themselves doubled or repeated as in the Margin.The consonants ர், ழ், can combine with other consonants alone, as in the Margin.The other twelve consonants, ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன், can be repeated themselves, or connected with the other consonants, as in the margin,-(Soo.55 and 63)The mute consonant ங் can be connected with the mute consonants ங் and க். See the example-(Soo.56)

The letter ஞ் can be connected with letters ஞ, ச, and ய. See the example-(Soo.57).The letter ட் can be connected with letters ட, க, ச, and ப. See the example-(Soo.58).The letter ண் can be connected with the letters ண, க, ச, ஞ, ப, ம, ய, and வண. See the example - (Soo.59),

(ந்) த, ந, ய. இவைகளுடன் மயங்கும். உ-ம். அந்தகன் செந்நாய் பொருந்யாது.

(ம்) ப, ம, ய, வ. இவைகளுடன் மயங்கும். உ-ம். அம்பு அம்மை திரும்யானை கலம்வலிது.

(ய், ர், ழ்) இவைகள், க, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ. இவ்வெழுத்துக்களுடன் மயங்கும். உ-ம்.

பொய்கை சார்பு

கொய்சகம்	கூர்மை
செய்ஞெண்டு	போர்யானை
பெய்தல்	சோர்வு
பேய்நாய்	மூழ்கல்
செய்பவை	வாழ்சேரி
பாய்மா	பாழ்ஞானம்
மெய்யன்	ஆழ்தல்
தெய்வம்	வாழ்நாள்
மார்கழி	தாழ்பனை
சீர்சிறப்பு	கீழ்மை
நீர்ஞாளி	வீழ்யானை
ஊர்தி	வாழ்வு
நீர்நாய்	

(ல், ள்). இவைகள் க, ச, ப, ய, ல, வ, ள. இவ்வெழுத்துக்களுடன் மயங்கும்.

உ-ம்.

அல்கல்	ஞொள்கல்
அல்சி	நீள்சினை
இயல்பு	நீள்பனை
கொல்யானை	வெள்யானை
அல்லி	முள்ளி
செல்வம்	கள்வன்

(வ்) வ, ய. இவ்வெழுத்துக்களுடன் மயங்கும்.
உ-ம் .:-தெவ்வர் தெவ்யாது.

(ற்) க, ச, ப, ற. இவ்வெழுத்துக்களுடன் மயங்கும்.
உ-ம். :-கற்கி கற்சிலை கற்பம் புற்று.

(ன்) க, ச, ஞ, ப, ம, ய, வ, ன. இவைகளுடன் மயங்கும்.
உ-ம்.
புன்கு புன்செய் பொன்ஞாண் இன்பம் தன்மை தன்வலி குன்று மின்னல்.

ய், ர், ழ், முன் க், ங், ச், ஞ், த், ந், ப், ம். இவ்வெட்டுமயங்கும். உ-ம்.

The letter ந் can be connected with the letters த, ந, and ய. See the example-(Soo.57)

The letter ம் can be connected with the letters ப, ம, ய, and வ. See the example-(Soo.60.)

The letter ய், ர், and ழ் can be connected with the letters க, ச, ஞ, த, ந, ப, ம, ய and வ. See the example,-(Soo. 61)

The letters ல் and ள் can be connected with the letters க, ச, ப, ய, ல, வ, and ள, as in the Margin-(Soo. 62)

The letter வ் can be connected with the letters வ and ய. See the example-(Soo.56)

The letter ற் can be connected with the letters க, ச, ப, and ற as in the Margin,(Soo.58)

The letter ன் can be connected with the letters க, ச, ஞ, ப, ம, ய, வ and ன. See the example-(Soo. 59)

The mute consonants ய், ர், ழ் can be connected with the mute consonants க், ங், ச், ஞ், த், ந், ப், ம் as shown in the Margin,-(Soo. 64)

ய்

வாய்க்கால் வேய்ங்குழல் ஆராய்ச்சி காய்ஞ்சொறி வாய்த்தல் வாய்ந்தது காய்ப்பு மொய்ம்பு.

ர்

பீர்க்கு ஈர்ங்கோதை நேர்ச்சி ஈர்ஞ்சடைபோர்த்தல் ஊர்ந்தவர் பார்ப்பு ஈர்ம்புனல்

ழ்

வாழ்க்கை பாழ்ங்கிணறு தாழ்ச்சி பாழ்ஞ்சோலை தாழ்த்தல் வாழ்ந்தவர் காழ்ப்பு வீழ்ம்புனல் எனவரும்.

போலியாவது

ஒரெழுத்தைப் போன்று மற்றோரெழுத்து நிற்றல்

அது மொழிக்கு முதலில் இரண்டெழுத்தும் இடையிலோரெழுத்தும் கடையில் ஓரெழுத்துமாக வரும்.

அவற்றுள் முதற்போலியாவது

அகரமும் யகரவொற்றுங் கூடி ஐ எனவும் அகரமும் வகரவொற்றுங் கூடி ஔ எனவு நிற்கும். உ–ம். அ+ய்=ஐ அ+வ்=ஔ.

இடைப்போலி

ச், ஞ், ய். இவைகளுக்குப் பின் அ மொழிக்கு முதலிலுமிடையிலும் ஐகாரமாக நிற்கும்.

உ–ம்.

பசல்	பைசல்
மஞ்சு	மைஞ்சு
மயல்	மையல்
அமச்சு	அமைச்சு
இலஞ்சி	இலைஞ்சி
அரயர்	அரையர்

சிலவிடங்களில் ஐகாரத்திற்கும் யகரத்திற்கும் பின்னிற்கும் நகரம் ஞகரமாக நடக்கும் உ–ம். ஐ+நூறு=ஐஞ்நூறு செய்+நீண்ட = செய்ஞ்ஞீண்ட.

கடைப்போலி

பால்பகாவஃறிணைப்பெயரினீற்று மகரம் னகரமாக நடக்கும். உ–ம். அகம் அகன் நிலம் நிலன்.

சாரியையாவது

எழுத்துக்களைச் சார்ந்துவருதல் அது அகரம் கரம் காரம் கான் என நான்குவகைப்படும்.மெய்யெழுத்துக்கண் மேற்காட்டிய நான்கு சாரியைகளையும் பெறும். உ–ம்.:–

ம்+அ=ம	;	ம்+கரம்=மகரம்
ம்+காரம்=மகாரம்	;	ம்+கான்=மஃகான்

என வரும்

OF THOSE LETTERS WHICH ARE SUBSTITUTED FOR OTHERS

There are four letters of this description; two of which are placed only in the beginning; another only i,e, the middle; and the third only in the end of a word,Those two which stand in the beginning of a word are அ ய் and அ வ், and are used instead of the single letters ஐ and ஔ as shown in the Margin,-(Soo. 70)

Another is the letter அ which is equivalent to the letter ஐ before the letters ச, ஞ, ய in the beginning and middle of a word, See the example in the Margin-(Soo.68 and 69)The third is the letter ந, which in some cases is equivalent to the letter ஞ, when it follows the letters ஐ and ய in the middle of a word, See the example in the Margin,-(Soo.69)

The fourth is the letter ன which stands for the letter ம at the end of a word, as shown in the margin,-(Soo.67)

There are four expletives which convey no idea whatever, viz. அகரம், கரம், காரம் and கான்; which,when added to the various letters of the alphabet, form their names,

The expletives அகரம், கரம், காரம் and கான் are added to the mute consonants.

நெட்டெழுத்துக்களேழும் காரச்சாரியையைப் பெறும். அவற்றில் ஐ ஔகாரச்சாரியையயன்றி கான் சாரியையையும் பெறும்.

உ–ம்

ஆகாரம் ஈகாரம் ஊ காரம் ஏகாரம் ஐகாரம் ஓகாரம் ஔகாரம் என வரும். ஐகான் ஔகான் எனவும் வரும்.

உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் கரம் காரம் கான் என்னுமூன்று சாரியைகளையும் பெறும். உ–ம். அகரம் இகரம் உகரம் எகரம் ஒகரம் அகாரம் அஃகான் என வரும் லகரம் லகாரம் லஃகான். எனவும் வரும்.

The காரம் is added to the long vowels, and கான் only to ஐ and ஔ.

The கரம், காரம் and கான் are added to the short vowels and consonants, See the examples in the Margin- (Soo.71)

INTRODUCTION TO PART II

The Teacher, before he commences the instruction of Etymology, thinks it highly necessary to call the attention of the Reader to the following remarks, as they tend, to throw light upon several parts of speech, and to develop the plan upon which the Tamil Grammarian has formed and arranged them,

In enumerating the verbs, he has placed them all in the Imperative Mood instead of the Infinitive Mood, He has unnecessarily divided substantives into different sorts, He treats the simple substantives as adjectives, in consequence of their derivation from the latter; and designates all those parts of speech, which are not principal ones, and which are imperfect, when they stand unconnected with the peculiar words to which they belong as எச்சம் or defective words, With this idea he has formed two sorts of எச்சம் under the head of verbs; the one he calls பெயரெச்சம் and the other வினையெச்சம். That is, when a phrase containing the conjugation of a verb remains defective or imperfect on account of a noun which the verb is to govern, it is called பெயரெச்சம்; and when it is defective on account of another verb, it is called வினையெச்சம். He has not (as the EnglishGrammar does) formed relative pronouns,because the பெயரெச்சம் performs their office.

He has styled the nouns which are compounded of both themselves and the effect of verbs as வினைக்குறிப்பு and when they are defective on account of nouns and verbs, as already explained, he describes them as பெயரெச்சக் குறிப்பு and வினையெச்சக் குறிப்பு. This பெயரெச்சம் also performs the office of relative pronouns,He frequently makes use of two

phrases, வேற்றுமை and அல்வழி; that is to say, when the declinable nouns are made use of in a phrase with cases, whether expressed or understood, he calls the phrase வேற்றுமை; from; and when the other parts of speech which do not admit of cases of cases are used in the composition, he calls it அல்வழி (a form devoid of cases).

When he uses the substantives as adjectives, he takes off the noun terminations and makes them defective, or எச்சம் as they are imperfect in themselves unless they are added to nouns,

In perusing the work, the reader, it is hoped, will bear in mind that the Tamil author proceeds first to give an out line of the different topics on which he proposes to treat, and then enters upon definitions of each of them in regular order, Of these two ways, the one he calls பொது (general) and other சிறப்பு (particulars or details).

When the conjugation of a verb is in its perfect form, he styles it வினைமுற்று (complete), because it is not in the participial form.

■ ■ ■

இரண்டாம் பிரிவு

சொல்லதிகாரம்

முதலாவது இயல்

1வது பிரிவு சொற்களைச்சார்ந்தது

சொற்கள் அறுவகைப்படும் அவையாவன,

1. ஒரெழுத்தாலாகிய சொற்கள்
2. பகுக்குஞ் சொற்கள்
3. பகுக்காச் சொற்கள்
4. ஒருபொருளைத் தருகிற பகுக்கப்படுகிற அல்லது பகுக்கப்படாத தனிச் சொற்கள்.
5. பலபொருள்களை விளக்குகிற தொடர்ச்சொற்கள்
6. தனித்தனியாகப்பகுக்காத போது ஒரேபொருளையும் பகுத்தபோது பல பொருள்களையுங்கொடுக்கிற சொற்கள்.

இச்சொற்களுக்கு திணை எண் பால் இடம் வேற்றுமைகளுரித்தாகும்.

மேலும் அவைகள் உலகநடை செய்யுணடை எழுத்துநடைகளினும் வழங்குகின்றன.

மேற்காட்டிய சொற்கள் அடியில் வருகிற வகையாகப்பிரிக்கப்படுகின்றன.

அவையாவன,

பெயர்ச்சொற்கள்.
வினைச்சொற்கள்.
இடைச்சொற்கள்.
உரிச்சொற்கள்.

அவைகளினுட் பிரிவுகளாவன

திசைச்சொற்களும் வடமொழித்திரிவுமாம்.

ஒரெழுத்தாலாகிய சொற்கள் நாற்பத்தியாறாம். அவைகளடியில் வருகின்றன.ஆ – A Cow. நீ –

ஈ –நெ –	
ஊ –	நை, நொ
ஏ –	
ஐ –	நோ –
ஓ –	பா –
கா –	பீ
கீ –	பெ –
கு –	பை
கூ –	பொ –
கை –	மா –
கொ –	மீ –
கௌ –	மூ –

PART II

ETYMOLOGY, OR, AS TAMIL GRAMMARIANS CALL IT, சொல்லதிகாரம்.

CHAPTER I

SECTION I - OF LETTERS

There are six sorts of words, viz

1. Words formed by a single letter.
2. Divisible words.
3. Indivisible words.
4. Simple words, whether divisible or indivisible, conveying one idea only.
5. Compound words conveying different ideas.
6. Words conveying only one idea each when un analyzed and different ideas when analyzed.

To these words Degree, Number, Gender, Person, and Case appertain: and they are all used both in common and higher dialects, and in writings,

The above six sorts of words are classed under the following heads:

Nouns.
Verbs.
Particles.
Adjectives.

THEIR SUB DIVISIONS

These are as follows: - Foreign words and words introduced from the Sanskrit, (Vide Soo 2 of சொல்லதிகாரம்.) Words formed by a single letter are forty- six in number, A list of them is given in Tamil.

(Vide Soo.2 of the Chapter பதவியல்.)

சா –
சீ –
சே –
சோ –
தா –
தீ –
து –
தூ –
தெ –
தை –
நா –
மெ –
மை –
மொ –
யா –
வா –
வீ –
வெ –
வை –
வெள –

சொல்லியல்

பகுக்குஞ்சொற்கள் இரண்டெழுத்துக்கள்முதல் ஒன்பதெழுத்துக்கள் வரையிலும் வருகின்றன.

அவைகள் வருமாறு:–

கூனி

கூனன்

குழையன்

அந்தகன்

அம்பலவன்

அரங்கத்தான்

உத்திராடத்தான்

உத்திரட்டாதியான்.

பகுக்காச் சொற்கள் ஒரெழுத்துமுதல் ஏழெழுத்துக்களீறாக வுண்டாக்கப்படுகின்றன.

உ–ம்.

ஆ.

ஆடு

ஆண்டு

அகலம்

உத்திரம்

உத்திரட்டம்

உத்திரட்டாதி

OF WORDS

Divisible words are formed by letters from two to mine inclusive, and they are as follows:

A hunch-backed woman.
A hunch-backed man.
A man wearing carrings.
A blind man.
God at Chdhambarem.
God at Sreerangam.
A man born in the Star உத்திராடம்.
A man born in the Star உத்திரட்டாதி. (Vide Soo.5, பதவியல்.)

Indivisible words are formed by letters from one to seven inclusive; as—

A Cow.
A Sheep.
A Year.
Breadth.
Name of a Star,
Do.
Do. (Vide Soo. 3 and 4, பதவியல்.)

பகுபதமாவது பகாப்பதமாவது ஒன்று நின்று ஒரு பொருளைத் தருகிற தனிச் சொற்களாவன.

நிலம்

நிலத்தன்

நட

நடந்தன.

தொடர் சொற்கள் பகுபதங்களினாலுண்டாக்கப் படுகின்றன. அவைகள் இரண்டு முதலாகத் தனி மொழிகளைத் தொடர்ந்திருக்கின்றனவென்பதை அடியில் வருகிற திருட்டாந்தரத்தினாற் காட்டப்படும்.

நிலம் வலிது

நிலத்தைக் கடந்தான்

நிலங்கடந்தபெருமாள்

அடியில் வருகிற சொற்கள் தனித்தனி பகுக்கப்படாத போது ஒரு பொருளையும்; பகுக்கப்பட்டபோது பலபொருளையும் விளக்குகின்றவைகள்.

எட்டு

தாமரை

வேங்கை

மேலேவிளக்கியிருக்கிற எட்டு என்ற மொழி இயல்பாயிருக்கும்போது ஒரு பொருளைத் தருகின்றது. அது இரண்டு சொற்களாகப் பகுக்கப்பட்டபோது எள் எனவும் து (புசி) எனவும் நிற்கின்றனவுந்தவிர அவைகள் புணர்க்கப்படுகையில் விகாரப்பட்டு எட்டு எனவாகின்றன.

தாமரை யென்னுஞ் சொல் பகாப்பதமாயிருக்கையில் மேலே காட்டிய வுதாரணப்படி ஒரு பொருளைக் கொள்கின்றது, தவிர அது தா எனவும் மரை எதுவும் பகுக்கப்பட்டபோது இரண்டு பொருளை யுணர்த்துகின்றது.

உ–ம்.:– தாவுகின்ற காட்டுப்பசு.

வேங்கை (அல்லது புலி) என்னும்மொழி பிரிக்கப்படாதபோது மேலே விவரித்திருக்கிறபடி ஒரு பொருளைக் குறிக்கின்றது. ஆனால் வேம் எனவும் கை எனவும் இரண்டு சொற்களாகப் பகுக்கப்பட்டபோது இரண்டுபொருளைக் கொடுக்கின்றது.

உ–ம்.:– வேகின்ற கை.

பாலையும் எண்ணையுங் குறித்து

முப்பால்களாவன. ஆண்பால், பெண்பால், அஃறிணைப்பால்.

ஆண்பாலும், பெண்பாலுமுயர்திணையெனவும் அஃறிணைப் பால் அஃறிணையெனவும் வழங்கப்படுகின்றன.

Words whether divisible or indivisible, conveying one meaning only, are as follows:

Land.

Land lord.

Walk thou.

Things passed.

Compound words are those that are formed by divisible or indivisible or indivisible words, They are composed of simple words from two in number, as will be shown in the following examples;

Ground is hard.

He passed over the ground.

The Deity Peroomal who passed through a tract of ground.

The following words are those that convey one idea each when unanalyzed, and different ideas when analyzed:

Eight.

A plant.

A tiger.

The word எட்டு, as explained above, conveys one idea when it is left by itself; viz, எட்டு, eight: but when it is divided into two words, they stand as எள் (rapeseeds) and து (eat) which when united undergo the variation, and then stand as எட்டு.

The word தாமரை (a plant) has one sense when not divided, as in the foregoing example; but when it is divided into two words, as தா and மரை, it conveys two ideas, Viz, a jumping wild cow.

The word வேங்கை (tiger), when undivided, conveys one sense, as in the foregoing example; but when divided into two words, வெம் and கை it conveys two ideas, viz a burning hand, (Soo.3,)

OF GENDER AND NUMBER

There are three Genders, Masculine, Femine and Neuter. The Mascluine, Femine and Neuter Genders are stated to be of higher order, and the Neuter of inferior order

அவைகள் மூன்று வகையாக வகுக்கப்படுகின்றன.

1வது உயர்திணை ஆண்பால் ஒருமை பன்மை

2வது உயர்திணை பெண்பாலொருமை பன்மை

3வது பலர்பால். அது ஆண்பால் பெண்பாலெனவுணரப்படாத பன்மை.

அஃறிணையென்பது ஒருமை பன்மை என்னும் இரண்டு எண்களையுடையது உ–ம். அஃறிணை யொன்றன் பால் அஃறிணைப் பலவின்பால்.

மேற்காட்டிய சொற்கள் மூவிடங்களைப் பெறுகின்றன.

உ–ம்.:–

தன்மை யொருமை பன்மை

முன்னிலை யொருமை பன்மை

படர்க்கை யொருமை பன்மை

அவைகள் அடியிற் காட்டப்படுகிற அட்டவணைப்படி பேசுகிறவனை யுணர்த்துகையில் தன்மையும் கேட்போனை யுணர்த்துகையில் முன்னிலையும் இவ்விரண்டு மல்லாதானை யுணர்த்துகையில் படர்க்கையுமாக விருக்கின்றன.

உலக வழக்கத்தில் உபயோகப்படுகிற சொற்களைக் குறித்து.

அவைகள் ஆறுவகையாம். அவையாவ.ன

1. இலக்கணமுடையது அல்லது முறைமையான சொற்கள்.
2. இலக்கணப்போலி அல்லது முறைபிறழ்வான சொற்கள்.
3. (மத்தியில் சிதைந்து) மருவிய சொற்கள்.
4. இடக்கரடக்கல் அல்லது கெட்ட வார்த்தைகள்.
5. மங்கலம் அல்லது இழிந்தவைகளை மறைத்துக் கூறுகிற மொழிகள்.
6. குழூஉக்குறி அல்லது சில மனிதர்களுக்குள் குறிப்பாய் வழங்குகிற பரிபாஷைச் சொற்கள்.

இலக்கணமுடைய சொற்களிவைகளாம்

நிலம், நீர், தீ, முதலாயின.

இலக்கணப்போலிச்சொற்களாவன

இல்முன்	முன்றில்
நகர்ப்புறம்	புற நகர்
புறவுலா	உலாப்புறம்
கண்மீ	மீகண்

They are divided into three classes,The Masculine Gender or superior order of both numbers is said to be of the First Class,The Feminine Gender is of the same order and numbers, and constitutes the Second Class.The Third Class is that called (பலர்பால்) which is the plural common to the Masculine and Feminine Genders.The Neuter Gender, which is of inferior order, is of two numbers, Singular and Plural. The above are of three persons : viz,

1st Person of both Numbers.
2nd Person of do.
3rd Person of do.

They are all of the First Person when they express the speaker; of the Second Person when spoken to; and of the Third Person when spoken of; as in the following list:

OF WORDS USED IN COMMON DIALECT

They are of six kinds, viz,

1) Regular words,
2) Words transposed, or irregular words,
3) Words which have been since altered,
4) Words which are substituted for indecent ones
5) Words of elegance substituted for low ones,
6) Technical words which some particular classes of men use among themselves,

1. Regular words,

The regular words are such as-Earth, Water, Fire, & c.

2. The words which are transposed are given opp. page

இடையே சிதைந்த மரூஉச் சொற்களாவன

வார்த்தைகள் ஆதியிலிருந்த நிலைகள்	**மத்தியிற் சிதைந்து வழங்கிய நிலைகள்**
அருமருந்தன்னபிள்ளை	அருமந்தபிள்ளை
மலையமாநாடு	மலாடு
சோழநாடு	சோணாடு
பாண்டிய நாடு	பாண்டி நாடு
இந்நாடு	இந்தநாடு
ஆதன்றந்தை	ஆந்தை
பூதன்றந்தை	பூந்தை
மரவடி	மராடி
குளவாம்பல்	குளாம்பல்
யாவன் யார்	ஆர் எவர்
என்	என்ன
ஆற்றூர்	ஆறை
கோவில்	கோயில்
பொதுவில்	பொதியில்

இடக்கரடக்கலான அல்லது **தாழ்ந்த** சொற்களுக்குப் **பதிற்சொற்கள்.**

தமிழ் இலக்கண நூலாசிரியர்கள் இம்மொழிகளை எடுத்துப் பேசியிருந்தபோதிலும் நமக்கவை அவசியமில்லை ஆகையாலவைகளைப் பேசாமல் விட்டுவிட்டோம்.

தாழ்ந்தவார்த்தை	**உயர்ந்தவார்த்தை.**
செற்றான்	துஞ்சினான்.
ஒலை	திருமுகம்.
இடுகாடு	நன்காடு.
	பரிவார்த்தைகள்
பொன்	பறி
ஆடை	காரை,
கள்	சொல்விளம்பி,

உயர்ந்த சம்பாஷனையில் அல்லது செய்யுணடையில் வழங்குகின்ற வார்த்தைகளைக்குறித்து விவரித்தல் அவசியமன்று. ஏனெனில் செய்யுளெல்லாம் தம்மை விளக்கும் வகையான அலங்காரமாகவும் உருவகமாகவும் சேர்க்கப்பட்டிருப்பதனால்.

3. Words since altered are as follow:

An affectionate child.
A country surrounded by hills.
Kingdom of Soaler.
Kingdom of Pandeyan.
This country.
Father of Authen.
Father of Poothen.
Foot of a tree.
A flower plant of a Tank.
Who.
What is this or that.
A village having a river.
A temple.
Common place.

Words substituted for indecent ones.

Although Tamil Grammarians treat of this subject, it will be unnecessary for us to do so; and the words are omitted accordingly.

Of words of elegance substituted for low ones.

Elegant expression.

துஞ்சினான். He is at rest.
திருமுகம். An epistle.
நன்காடு. Blessed Ground.

Of Technical words.

பறி, a term used by goldsmiths.
காரை, a term used by elephant-drivers.
சொல்விளம்பி, a term used by jungle men,-

(Vide Soo.10)

Of words used in the higher dialect or in verses no explanation is required; because the verses are composed naturally of elegant and figurative expressions as they represent themselves –

(Vide Soo.11)

இரண்டாவது பிரிவு

பெயர்ச்சொற்களைக் குறித்து

அவை அறுவகைப்படும். அவையாவன.:-

இடுகுறிமரபுப்பெயர்
இடுகுறிஆக்கப்பெயர்
காரணமரபுப்பெயர்
காரணஆக்கப்பெயர்
வினையினால் வந்த பெயர்
பொருளால் வந்த பெயர்
இடத்தால் வந்த பெயர்
காலத்தால் வந்த பெயர்
அவையவத்தால் வந்த பெயர்
குணப்பெயர்
தொழிற்பெயர்

இடுகுறிமரபுப்பெயர் அல்லது நிலைபெற்றிருக்கின்ற யாதொரு பொருளினுடையபெயரைக் குறிக்கிற சொற்கள்.

ஆண்
பெண்
மரம்

இடுகுறியாக்கப்பெயர்

முட்டை

இது சுப்பிரமணியருடைய பெயராக வழங்கப்படுகின்றது.

காரணமரபுப்பெயர்

அவன்
அவள்
காளை

காரணஆக்கம் அல்லது பொருள்களைக் காட்டுகிற பெயர்களாவன.

பொன்னன்
பூணன்.

வினையாலணையும் பெயர்களிவை

நடந்தவன்.
நடக்கிறவன்.
நடப்பவன்.

பலபொருள்களைக் குறிக்கிறபெயர்ச்சொற்கள் மூன்று வகைப்படும். அவையாவன,

1 வது கிளைகளைக் குறித்து
2 வது எண்ணைக் குறித்து
3 வது குழுவைக் குறித்து

SECTION - II

OF NOUNS

They are of six kinds: viz.-
Nouns denoting the names of any thing that naturally exists.
Nouns which have the name given.
Nouns known by their kind.
Substantives showing the effect of Causes.
Verbal Noun.
Substantives of all kinds in general.
Nouns denoting the different parts of the region.
Nouns denoting season or time.
Nouns denoting limbs.
Nouns denoting qualities.
Nouns denoting professions.

Of Nouns denoting the names of any thing that exists.

Male. Female.
A Tree.

Of Nouns that have a given name.

Egg

This word is used as the name of the Deity Soobramoneyer.

Nouns known by their description,

He, She, A Bull.

The Nouns denoting properties are:

A man that possesses gold,
A man that wears ornaments,

Verbal Nouns are these;

A person walked,
A walker,
A man that will walk, (Vide Soo.18,)

Nouns denoting different objects are of three kinds, viz,

1st. of branches of family.
2 nd. of Number.
3 rd of Community.

முதல்வகையாவது

ஆண்பால், பெண்பால், பலர்பால் – **உ –ம் :– தமன், தமள், தமர்.**

இரண்டாவது வகையாவது

ஒருவன்
ஒருத்தி
ஒருவர்

ஒன்றென்னுமெண்மாத்திரம் ஆண்பால் பெண்பால் விகுதிகளை யேற்குமேயன்றி மற்றவெண்களேலா.

மூன்றாவது வகையடியில் வருகின்றன

அவையத்தான்

அவையத்தாள் அல்லது அவையத்தி

அவையத்தார்

பலவகையிடங்களைக் காட்டுகிற பெயர்கள் அறுவகைப்படும்.

1வது திணை
2வது தேயம்
3வது ஊர்
4வது வானம்
5வது அகம்
6வது புறம்

1வது திணை அல்லது நிலங்களைக் காட்டுகின்ற பெயர்ச்சொற்கள் **ஐவகைப்படும். அவையாவன,**

குறிஞ்சி
பாலை
முல்லை
மருதம்
நெய்தல். உ–ம்.

குறவன்
குறத்தி
குறவர்
மறவன்
மறத்தி
மறவர்
இடையன்
இடைச்சி
இடையர்

The first kind is

Masculine Gender,Feminine Gender,
Plural of both Members A Relative. Do.Do.

The second kind is:

A Man.
A Woman.
One whether male or female.

The number one alone can very its termination on account of sex; but it is not the case with the other numbers,

The Following are of the third kind.

A man belonging to a community.
A woman of a community.
People of a community.

Nouns denoting different tracts of land and places are of six kinds.

The first is of land.
The second is of country.
The third is of village.
The fourth is of upper region.
The fifth is of dwelling places.
The sixth is of exterior part.

Nouns denoting land are of five kinds, viz,

Hill tract.
Dry land.
Land in Jungles.
Wet lands.
Lands in the border of the sea, viz.

`He that in habits the hill tract,
She that in habits the hill tract,
They that inhabit the hill tract,
He that dwells upon the dry land
She that dwells upon the dry land.
That they dwell upon the dry land.
He that lives in jungles.
She that lives in jungles.
That they live in jungles.

உழவன்
உழத்தி
உழவர்
பரதன்
பரத்தி
பரதர்

2வது தெய்வத்தால் வந்த பெயர்கள்

சோழியன்
சோழிச்சி
சோழியர்

3வது ஊரால் வந்த பெயர்

கருவூரான்
கருவூரி
கருவூரார்

4வது. வானத்தால் வந்த பெயர்

வானத்தான்
வானத்தி
வானத்தார்.

5வது அகத்தால் வந்த பெயர்

அகத்தான்
அகத்தாள்
அகத்தார்

6வது புறத்தால் வந்த பெயர்

புறத்தான்
புறத்தி
புறத்தார்

காலத்தால் வந்த பெயர் நான்கு வகைப்படும்.

1வது ஆண்டு
2வது பருவம்
3வது மாதம்
4வது நாள்

ஒருவர் பிறந்த ஆண்டினாற் பகுத்தறியப்பட்டது.

மூவாட்டையான்
மூவாட்டையாள்
மூவாட்டையார்

ஒருவர் பிறந்த பருவத்தாற் பகுத்தறியப்பட்டது

He that inhabits the wet land.
She that inhabits the wet land.
They that inhabit the wet land.
He that inhabits the land near the sea.
She that inhabits the land near the sea.
That they in habit the land near the sea.

NOUNS DENOTING COUNTRIES

He that inhabits the Solen's country.
She that inhabits the Solen's country.
They that inhabit the Solen's country.

NOUNS DENOTING VILLAGES.

A man belonging to Caroor.
A woman belonging to Caroor.
They that belonging to Caroor.

NOUNS DENOTING UPPER PEGIONS.

A heavenly male being.
A heavenly female being.
Heavenly beings.

NOUNS DENOTING DWELLING PLACES OR HOUSES.

He that dwells in a house.
She that dwells in a house.
That they dwell in a house.

NOUNS DENOTING EXTERIOR PARTS,

He that lives in the exterior part.
She that lives in the exterior part.
They that live in the exterior part.

NOUNS DENOTING SEASONS OR TIMES ARE OF FOUR KINDS.

1st of year.
2nd of season.
3rd of month.
4th of star.

THE PERSON BORN IN A YEAR IS DISTIN GUISHED THEREBY.

He that is three years of age.
She that is three years of age.
They that are three years of age.

THE PERSON BORN IN A SEASON IS DISTIN GUISHED THERE BY.

வேனிலான்
வேனிலாள்
வேனிலார்

ஒருவர் பிறந்த மாதத்தினாற் பகுத்தறியப்பட்டது.

மாசியான்
மாசியாள்
மாசியார்

ஒருவர் பிறந்த நட்சத்திரத்தினாற்பகுத்தறியப்பட்டது.

ஆதிரையான்
ஆதிரையாள்
ஆதிரையார்

அவயவத்தைக்குறிக்கிற பெயர்கள்

தலை
முகம்
கண்
காதுமுதலானவை
கண்ணன்
கண்ணி
கண்ணர் முதலானவை

குணத்தைக்காட்டுகின்ற பெயர்களெட்டு வகைப்படும்.

அளவைக்காட்டுகிற பெயர்
அறிவைக்குறிக்கிற பெயர்
வடிவையறிவிக்கிற பெயர்
நிறத்தைவிரிக்கிற பெயர்
கதியைவிளக்குகிற பெயர்
சாதியைப்பகுக்கிற பெயர்
குடியையுணர்த்துகிற பெயர்
சிறப்புத் தொழிலைச்சுட்டுகிற பெயர்

அளவால் வந்த பெயராவன

நெடியன்
நெடியள்
நெடியர்

இவ்விடைச் சொல் பல புள்ளிகளையொன்றாகச் சேர்த்திடுவதில் இணைக்கப்படுமாகிலது கடைசித் தொகைக்கு முன்னாகவே எப்போதும் வைக்கப்படுகின்றது.

கல்வி செல்வம் ஒழுக்கம் பெறுவாருமுளர்

அறம் பொருளின்பம் வீடு நான்குஞ் சொல்வது நூலே.

இந்த உம்மை இந்த வாக்கியத்தில் பொருளை முடிவு செய்யும் பொருட்டு இவ்வெண்ணுக்கருகிலுபயோகிக்கலாயிற்று.

சாத்தனும் கொத்தனும் போயினர்

இவ்விடத்தில் அது இரண்டு எண்களைச் சேர்ப்பதற்காக உபயோகிக்கப்பட்டிருக்கின்றது.

பாலுமா மருந்துமாம்

அது இவ்விடத்தில் ஆக்கத்தைக் காட்ட உபயோகிக்கலாயிற்று.

மன் என்னுமிடைச்சொல் பல வாக்கியங்களிற் பிரயோகமாதலினாலே யறுவகைப் பொருள்களை விளக்குகின்றது.

கூரியதோர் வாண்மன்

இந்த இடைச்சொல் இழந்து போன அந்த வாளரியதென்று காட்டுவதற்காகவுபயோகப்பட்டிருக்கின்றது.

நெடியன்மன்

இவ்விடத்தில் இந்த இடைச்சொல் அவன் வலியனுமென் றுணர்த்துதற்குப் பிரயோகித்திருக்கின்றது.

சிறியது பெறினுமெனக்கீயுமன்னே.

இவிடத்தில் அது கிடைப்பதற்கு அரிதென்பதைக் காட்டுகின்றது.

எந்தை யெமக்கருளுமன்

இவ்விடத்திலது மிகுதியை விளக்குகின்றது.

மன்னா, உலகத்து மன்னியதுபுரிமே.

அது இவ்விடத்தில் நிலை பெறுதலை யுணர்த்துகின்றது.

இவ்விடத்தில் மற்று என்னுமிடைச்சொல் சிறப்பு விதிக்காக வருகின்றது.

மற்றறிவா நல்வினையாமிளையமென்னாது கைத்துண்டாம் போதே யறஞ்செய்க.

இவிடத்தில் மற்றென்னுமிவ்விடைச் சொல் கருத்திலுள்ள காரியத்தை முயற்சிக்கிற வினைச் சொல்லுக்கு உபயோகிக்கப் பட்டிருக்கின்றது.

REMARK

If this particle (உம்) is to be joined in connecting the different items together, it is always placed before the last number.

There are people capable of attaining learning, wealth and humanity.

It is the only book which treats of the nature of charity, of acquiring wealth and happiness and of salvation in all four.

The உம் is used in this scheme near the aggregate number four, in order to render the sentence perfect.

Satten and Cotten went away.

Here it is used to connect two numbers.

It will become both milk and medicine.

It is used here to shew the advantage.-(Vide Soo. 6, 7 and 8.)

The particle மன் by its application in various pharases conveys six different ideas.

The sword was sharp though.

This particle is used here to shew that the sword lost was good in its kind.

He is a tall man too.

Here the particle is applied to convey a sence that he is a strong man also.

Though you should get a little, give it to me.

Here it shews the scarcity of obtaining.

My father bestows much upon me.

Here it signifies much.

O King! grant me what exists in the World.

It simly shews here the existence. - (Vide Soo. 13)

Here comes the particle மற்றும் for definition.

When you have money, do you charity without telling, that you can think of it hereafter as you are now young.

Here the particle மற்று is applied to the verb which actuates the object of view.- (Vide Soo. 14 and 15.)

இக்கொல் என்னுமிடைச்சொல் சில வாக்கியங்களில் ஓசையை நிறைக்க அசைகளாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. சிலவிடங்களில் அது சந்தேகப்பொருளை விளக்க வைக்கப் பட்டிருக்கின்றது.

கற்றதனாலாய பயனென்கொல் (ஞானமில்லாமல்)

இவ்விடத்தில் கொல் என்னுமிடைச்சொல் பொருள் தொடராக அசையாக நிற்கின்றது.

இவ்வுரு ஆண்கொல் பெண்கொல்

மேற்கூறிய இடைச் சொல்லையிவ்விடத்துபயோகித்தலினாலே ஐயப்பொருள் விளக்கப்பட்டிருக்கின்றது

·அந்தில் என்னுமிடைச்சொல் ஒரு வாக்கியத்தில் இசை நிறைக்கவும் இடப்பொருளை குறிக்கவுமுதவுகின்றது.

அந்தில்கச்சினன் மன்னவன்

இவ்விடத்தில் அந்தில் என்னுமிடைச்சொல் அசையாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது.

உன் சேயிழையந்திற்றுஞ்சும்

இவ்விடத்திலிவ்விடைச் சொல்லிடத்தை வெளிப்படுத்த உபயோகிக்கப் பட்டிருக்கின்றது.

ஆங்கு என்னுமிடைச்சொல்லும் மேற்காட்டிய பிரயோகங்களுக்குள்ளா கின்றது.

அம்ம என்னுமிடைச்சொல் இரண்டிடங்களைப் பூர்த்தி செய்கின்றது. ஒன்று ஒரு வாக்கியத்திலிருக்கிற இசைக் குறைவை நிரப்புகின்றதா யிருக்கின்றது. மற்றொன்று கேள் என்னுஞ் சொல்லை நடத்துகிறதா யிருக்கின்றது.

அது மற்றம்ம.

இவ்விடைச் சொல் முற்றும் வாக்கியத்தினுடைய மாத்திரையைப் பூர்த்தி செய்கின்ற அசைச் சொல்லாயிருக்கின்றது.

அம்ம வாழி தோழி

தில் என்னுமிடைச்சொல் வேறு வேறு பொருளை விரிக்க வழங்கப்படுகின்றது.

அரிவையைப் பெறுக தில்லம்மயானே

இவ்விடத்தவ் விடைச்சொல் காதலை விளக்க வுபயோகத்திருக்கின்றது.

என் என்று இவ்விடைச் சொற்கள் இங்கிலீசு கூட்டிடைச் சொல்லாகி that என்பதின் செய்கையை நடத்துகின்றது. ஆயினும் அது பெயர்ச்சொல் வினைச் சொற்களுடன் சேர்க்கப்படுகின்றது. மேலும் இவ்விடங்களில் எச்சரிக்கையையும் ஒப்பிடுதலையையும் விளக்குகின்றது.

The particle கொல் is used simply as expletive to supply the defect of voice in some sentences. In some it is employed to express doubt.

It learning (without virtue) what benefit can there be?

Here the particle கொல் stands simply as an expletive.

Unknown whether this figure is male or female.

The doubt is implied here by the use of the said particle. - (Vide Soo. 16.)

The particle அந்தில் serves to supply the defect of quantity in a phrase and to point out the place.

Dressed in cloth was the king.

Here the particle அந்தில் is used simply as an expletive.

Your wife will sleep there.

Here the particle is used to express the place.

The particle ஆங்கு also undergoes the similar applications. - (Vide Soo. 18)

அம்ம. This particle performs two offices; the one is the supplying of the defect of voice in a sentence and the other is that which the word "hear" performs.

That is all.

It is here merely an expletive, making the quantity of the sentence perfect.

Hearest thou, fellow woman, you will prosper.- (Vide. Soo.19)

தில் This particle is made use of to express different ideas.

O Ammah! none but I should have the girl.

Here the particle is applied to denote love. - (Vide Soo. 12)

These particles perform the office of the English Conjunction "that;" but it is added to the Verbs and Nouns, and in some places it signifies rapidity and comparison.

இன்னமும் அவைகள் பல பொருள்களை எண்ணுவதினு மிருக்கின்றன. பண்புகளைத் தொழிற்பண்புகளாய்ச் செய்யவுஞ் சேர்க்கப்படுகின்றன.

மைந்தன் பிறந்தானெனத் தந்தையுவந்தான்
உறையூரை நல்லவூரென்று சொல்லுகிறேன்
பறவை பொள்ளென்று அல்லது பொள்ளெனப் பறந்தது.
ஓர் எருமை குட்டத்தில் துடுமெனப் பாய்ந்தது.
நிலனென, நீரென, தீயென, வளியென, வானெனப் பூதங்களைந்து
வெள்ளென வெளுத்தது
ஒடு ஓடு தெய்ய, இவைகள் சுத்த அசைகள்.
மா என்னுமிவ்விடைச்சொல் முன்னிலையில் வழங்கப் படுகின்றது.
நீ உண்கமா.

கவனிப்புகள்

சாத்தன் கொத்தன் இருவரும் வந்தார் என்னுமிவ்வாக்கியம் கூட்டிடைச் சொற்களின்றி நின்ற போதினும் இல்க்கண நெறியாகவே யிருக்கின்றது. ஏனெனில் இரண்டு எண்களுமீற்றிற் சேர்க்கப்பட்டிருகின்றன. இவ்வாறான சொற் சேர்க்கைகளைச் செவ்வெண் என்று சொல்லப்படும்.

எ என்றா எனா இவ்விடைச் சொற்கள் பிரிப்புக் கூட்டிடையைப் போல் ஒவ்வொரு மனிதனையுந் தனித் தனி காட்டுகின்றது.

சாத்தனே கொத்தனே யிருவரும் வந்தார்.
சாத்தனென்றா கொத்தனென்றா இருவரும் வந்தார்.
சாத்தனென்னா கொத்தனென்னாயிருவரும் வந்தார்.

உம், என, என்று, ஒடு இவ்விடைச் சொற்கள் ஈற்றில் எண்ணைப் பெற்றாவது பெறாமலாவது கூட்டிடைச் சொற்களாக வழங்கப்படுகின்றவை.
உதாரணம்

சாத்தனுங் கொத்தனுமிருவரும் வந்தார்.
சாத்தனென கொத்தனென இருவர் வந்தார்
சாத்தனென்று கொத்தனென்றிருவர் வந்தார்
சாத்தனொடு கொத்தனொடு இருவர் வந்தார்
சாத்தனுங் கொத்தனும் வந்தார் பிறவுமன்ன.

மேற்காட்டிய நான்கிடைச் சொற்களையுமடிக்கடி கூறுவதைத் தடுக்க சில இலக்கணிகள் அடியில் வருகின்ற உதாரணங்களைப் போல் வாக்கிய முடிவில் அவைகளில் எதனையேனும் வைக்கிறார்கள்.

வினை பகையென்றிரண்டு
பகை பாவமச்சம் பழி யென நான்கு
பொன் வெள்ளி செம்பொடு மூன்று
வினையென்று பகையென்று இரண்டு.

They are moreover employed in enumerating different things and added to adjectives to make them adverbs.

The father was glad that he begot a son.

I say that Woriyoor is a good village.

The bird flew with vehemence.

A buffalo leaped into a tank, which produced a noise - "Doodoom."

Earth, water, fire, wind, sky, in all five elements.

The day broke clearly.-(Vide Soo. 17)

These are mere expletives.

This particle is used in the 2nd person.

Eat thou. - (Vide Soo. 20)

OBSERVATIONS

Sautten, Cotten, these two persons came. This sentence, though standing without connecting particle, is yet grammatical, because they are connected by the addition of the last word two. This mode of construction is called
செவ்வெண்.

These particles point out individually the number of persons as disjunctive conjunctions.

Sautten, Cotten, these two persons came.

These particles also are of the same kind as the foregoing ones.

These particles are used as copulative conjunctions, with or without the enumeration of numbers in the end.

To prevent the frequent repetition of the said four particles, some Grammarians place any of them at the end of a sentence, as in the following examples.

(Vide Soo. 10)

ஒரு வாக்கியத்தில் வினைச் சொற்களும் யாதொரு கூட்டிடைச் சொல்லின்றி அடியில் வருகின்ற உதாரணங்களின்படி நிற்கின்றன. அது இலக்கணவழுவன்று.

மயிலாடக் குயில்வாட மாமுகிலெழுந்தது.

மியா.	இத்தை.
இகம்.	வாழிய.
மோ.	மாள.
மதி.	ஈ.
அத்தை.	யாழ.

இவ்விடைச்சொற்கள் பொருளற்றவைகளாயினும் ஏவல் வினையொழுங்கில் மாத்திரம் அடியில் வருகின்றவு தாரணங்களின் படியுபயோகிக்கப்படுகின்றன.

நீ சென்மியா.
தண்டுறையூர்காணிக.
கண்டது மொழிமோ.
சென்மதிபெரும.
குறுமகளுள்ளிச் செல்லத்தை.
நீயொன்று பாடித்தை.
வாழி வாழிய.
தவிர்ந்தீகமாள.
சென்றீ.
செய்வினையிடத்துச் செலவயர்ந்தியாழ.
யா. ஒரும்.
கா. போலும்.

பிற.	இருந்து.
பிறருக்கு.	இட்டு.
அரோ.	அன்று.
போ.	ஆம்.
மாது.	தாம்.
இகும்.	தான்.
சின்.	கின்று.
குரை.	நின்று.

இவ்விடைச்சொற்கள் எவ்வளவும் பொருள்கொடாத வைகளாயினும் அவைகள் பல வாக்கியங்களில் மாத்திரையைப் பூர்த்தி செய்யப் பிரயோகிக்கப் படுகின்றன.

யா பன்னிருவர் மாணாக்கர்.
இவளைக் காண்டிகா.
ஆயனையல்லபிற.

The Verbs also stand in a sentence without any connecting particle; and this is not ungrammatical, as in the following examples;

The great cloud rose up which made the peacocks dance, the singing birds pensive.

(Vide See 11)

These particles are of no signification, but are used in the Imperative Mood only; as in the following examples.

Go thou.
Look at the village which is cold.
Tell what you saw.
Go you, a respectable man.
Go thou thinking of the little Girl.
You sang one.
Be thou blessed.
Give thou excepting some.
Go thou.
Detest the place you were to go to-

(Vide See. 21)

These particles are of no meaning whatever, but they are used to supply the defect of quantity in the different phrases.

Twelve disciples.
Look at this woman.
Not the shepherd.

நசைபிறக்கொழிய.
அரசன் வந்தனனரோ.
நாயகன் பிரியின் நாயகி வாழாதென்போ.
உரைத்தனர் மாதோ.
காண்டிகு மல்லமோ.
என்றிசினோரே.
பல் குரைத்துன்பம்.
அஞ்சுவதொருமறனே.
வருந்தினைபோலும்.
எழுந்திருந்தன்.
பிளந்திட்டான்.
சேரதுமன்றே
ஊரெலாம்பணியுமாம்.
நீர்தாம்.
அவன்றான்.
ஆசைகொண்டிருக்கின்றேன்.
துணையாய் நின்றான்.

நான்காவதியல்

உரிச்சொல்லை நடாத்துதென்று சொல்லப்படும்.

அதுநடாத்துஞ் சொற்கள் இங்கிலீஷ்லக்கணசாஸ்திரப் படிக்கு Abstact Noun ஆகவும் Verbal Noun ஆகவுமிருக்கின்றன.

தமிழிலக்கணிகள் அவ்வுரிச்சொற்கள் பெயர்க்கும் வினைக்குமுரித்தானதென்று சொல்லுகிறார்கள்.

தமிழிலக்கணிகள் சொல்லுகிறபடி பெயர்ச்சொற்களிலிருந் துண்டாகியவுரிச் சொற்களாவன.

அறிவு.
அருள்.
ஆசை.
அச்சம்.
மானம்.
நிறை.
பொறை, ஓர்ப்பு.
கடைப்பிடி.
மையல்.
நினைவு.
வெறுப்பு.
உவப்பு.
இரக்கம்.

Let the love be gone.
The King came.
If the husband separate, why would not the wife live?
Said they.
Cannot we see ?
They said.
Different afflictions.
It will be an act of justice or charity to fear sin.
You are suffering.
I rose.
He broke or spilt it.
We shall reach.
The whole of the villages will submit.
You are.
He is.
I am seized with love.
He bore me company. - (Vide See.22)

CHAPTER IV

Professes to treat of Adjectives, or உரிச்சொற்கள் which according to the principles of English Grammar appear to be abstract verbal or participal Nouns and Nouns derived from Adjectives.

The Tamil Grammarians say that the are words added to the Nouns and verbs as their peculiar property - (Vide See 1)

Abstract Nouns, or Adjectives derived from Nouns, as the Tamil Grammarians call them :

Knowledge.
Grace or mercy.
Love or affection.
Fear.
Honesty respctablility
Nobility, Emineuce, Morality.
patience.
Preverance.
Love, lowdness.
Thought.
Destestation.
Pleasure.
Compssion.

நாணம்.
கோபம்.
துணிவு.
பொறாமை.
அன்பு.
துன்பம்.
இன்பம்.
இளமை.
மூப்பு.
இகல்.
வென்றி.
தீமை.
ஊக்கம்.
மதம்.
மறம்.
மறவி.
வட்டம்.
இருகோணம்.
முக்கோணம்.
சதுரம்.
நெடுமை.
குறுமை.
நற்கந்தம்.
துற்கந்தம்.
வெண்மை.
செம்மை.
கருமை.
பொன்மை.
பசுமை.
கசப்பு.
புளிப்பு.
இனிப்பு.
உப்பு.
வெம்மை.
தண்மை
மென்மை.
வன்மை
நொய்மை.
சீர்மை.
புசித்தல்.

Shame, modesty.
Anger.
Courage, boldness.
Envy.
Affection.
Poverty-Indigence.
Pain.
Pleasure or hapiness.
young age.
Old age.
Eumity.
Conquest.
njury - Misclrief.
Cheerfulness.
Arrogance-paide.
Heroism.
Forgetfulness.
Circle.
A figure having two angles.
Triangle.
Squire.
Talmess.
Shortness.
Good smell.
Bad smell or stink.
Whiteness.
Red.
Blackness.
Gold colour or Yellow colour.
Green.
Bitterness.
Sourness.
Sweetness.
Saltnness.
Heet.
Coldness.
.Softness.
Hardness.
Thinness.
Good order, good state.
(Vide Soo. 11, 12, 13 and 14.)
Eating.

தூங்குதல்.
தொழுதல்.
அணிதல்
பிழைத்தல்.
தோன்றுதல்
மறைத்தல்
வளருதல்.
நீங்குதல்.
அடைதல்.
நீங்குதல்.
நடுங்குதல்.
இசைதல்.
ஈதல்.
சால.
உறு.
தவ.
நனி.
கூர்.
கழி.
மாற்றம்.
நுவர்ச்சி.
செப்பு.
உரை.
கரை.
நொடி.
இசை.
கூற்று.
புகல்.
மொழி.
கிளவி.
விளம்பல்.
அறைதல்.
பாட்டு.
பகர்ச்சி.
இயம்பல்.

Sleeping.
Praying-Worshiping.
weering.
Living.
Appearing.
Concealing-hiding.
Growing.
Faving wethering.
Attaining.
Seprating.
Trembling.
Yielding or agreeing
Giving. - (Vide soo. 15.)

These are line English Adjectives. -

(Vide Soo. 16.)

முழுங்கல்.
இரட்டல்.
ஒலித்தல்.
கலித்தல்.
இசைத்தல்.
துவைத்தல்.
பிளிறல்.
இரைத்தல்.
இரங்கல்.
அழுங்கல்.
இயம்பல்.
இமிழ்தல்.
குளிரல்.
அதிர்தல்.
குரைத்தல்.
கனைத்தல்.
சிலைத்தல்.
சும்மை.
கௌவை.
கம்பலை.
அரவம்.
ஆர்ப்பு.
கடியென்னுஞ் சொல் வகையான பொருளையுடைத் தாயிருக்கின்றது.
காப்பு.
கூர்மை.
வாசனை.
விளக்கம்.
அச்சம்.
சிறப்பு.
விரைவு.
மிகுதி.
புதுமை.
ஒலித்தல்.
நீக்கல்.
மணம்.
எரிப்பு.

சிந்திப்பு

மேற்காட்டியவுரிச்சொற்களைப் பெயர்ச்சொற்களுடன் சேர்க்கப்படுகிற வகையை கூறுவது. அதிகாரத்தில் விரித்துக் கூறப்படும்.

The word கடி has thirteen different meanings
Guard
Sharpness
Smell
Brightness
Fear
Eminence
Hastees
Excess
Newness
Sounding
Avoiding
Marriage
Harshness- (Vide See.16)

NOTE

The mode in which the above உரிச்சொற்கள் are joined to Substantives is explained in the 3rd **Part.**

ஐந்தாவதியல்

திசைச்சொற்களைச் சார்ந்தது

தள்ளை.	தாய்.
அச்சன்.	தந்தை.
கையர்.	வஞ்சர்.
கிழார்.	தோட்டம்.
பாழி.	சிறு குளம்.
செய்.	வயல்.
எகின்.	புளி.
எலுவன்.	தோழன்.
அந்தோ.	ஆச்சரியம்.
கரை.	குளிர்.
பாண்டில்.	எருது.
கொக்கு.	மாமரம்.

மூன்றாம் பிரிவு

பொதுவிதி

இவ்வதிகாரம் இங்கிலீசிலக்கண சாஸ்திரத்தின்றொடர் மொழியியலைப்போல் மற்றவதிகாரங்களிற் கூறாது ஒழிந்த விதிகளையும் உருவகவலங்காரங்களையும் பிறவற்றையுமடக்கிக் கொண்டிருக்கின்றன.

1 வது விதி

ஆகு பெயர்.

பொருள் இடம் காலம் (மிருகங்கள் மரங்கள் முதலானவைகளின்) சினை குணம் தொழில் அளத்தல் எண்ணல் எடுத்தல் கருவி முதலானவைகளைக் காட்டுகின்ற அநேகம் பெயர்ச் சொற்களிருக்கின்றன. ஆயினும் அவைகள் எவற்றை விவரிக்க வினாவ வுள்ளாக்கப்படுகின்றனவோ அவற்றிற்குரிய பொருள்களை யுணர்த்துகின்றன.

பொருளாகுயெர்

1. தாமரைபுரையுங்காமர் சேவடி (ஊருணியில் அல்லது தடாகத்தில் முளைக்கின்ற ஒருமுதல்.)

   இவ்விடத்திற்றாமரை யென்னுமொழியை அதனுடைய மலரெனக்காட்டியிருப்பதால் அடிகள் தாமரைப் பூவையொத் திருக்கின்றவெனப் பொருளாக்க வேண்டும்.

2. ஆம்பனாறுந் தேம்பொதிகிளவி (ஒரு புட்பம்) தேனைப் போலிருந்த சொற்களைக் காட்டுகின்றது.

   ஒரு புட்பமாகிய ஆம்பலென்னுஞ் சொல்லிதழுக்கு உவமானிக்கப் பட்டிருக்கின்றது.

   அடியில் வருபவை இங்கிலீசிலக்கணத்தில் வழங்குகின்ற அலங்காரச் சொற்களைப் போன்றிருக்கின்றன.

CHAPTER V

OF FOREIGN WORDS

Mother
Father
Enemy
Garden
A small tank
A field or land
Tamarind.
A Companion.
Alas
Coldness.
A Bullock.
A Mango Tree.

(Vide See.15 of the Chapter)

PART III

GENERAL RULES

This part like Syntax in English contains exceptions to several Rules in other parts, and treats of figures of speech and other subjects.

RULE - I

There are several Nouns denoting substances, places, time, limbs of animals, trees, quality, actions, measure, number, weight, instrument, & c.; but they all convey such meanings as the subjects to which they are made to relate, demand.

NOUNS DENOTING OBJECTS OR THINGS

1. The beautiful feet are like Thamary (a plant growing in ponds or tanks).
   Here the word "Thamary" is construed as the flower of the plant; therefore the feet should meant resembling the Tamary flower.
2. The lip like ambel (a flower) oft conveys words full of honey scent.
   The word ambel which is a flower is taken as lip.
   The following are figures like metonomy in English.

3. விளக்கு முறிந்தது.
இவ்விடத்தில் விளக்கென்னுஞ் சொல்லினால் தனதுதானமாகிய தண்டெனவெண்ணப்படுகின்றது. இது தமிழ்ப்பாஷையில் தானியாகுபெயரெனக் கூறப்படும்.
4. திருவாசகம்.
இம்மொழி அப்பெயரினால் வழங்குகின்ற நூலையுணர்த்து கின்றது.
5. அலங்காரம்.
இவ்வார்த்தை அலங்காரத்தை யுணர்த்துகிறவொரு நூலுக்காகின்றது.
6. திருவள்ளுவர் ஒரு இயற்பெயராயிருக்கின்றது.
இது அப்பெயரினையுடைய ஆசிரியாரலியற்றிய வரிய நூலைக் குறிக்கின்றது. சுருக்கிச் சொல்லுமிடத்து நூலாசிரியரது பெயர்நூலுக்காயிற்று.

இடவாகுபெயர்

7. அகனமர்ந்து செய்யாளுறையும்.
இடத்தை விளக்குகின்ற அகன் என்னுமொழி மேற்காட்டின வாக்கியத்தில் மனமெனப்பொருள் தருகின்றது.
8. புறங்கொடையறியாமறந் திகழ்வேலோன் (உயுத்தத்தி லெனப்பொருள்)
வெளியிடமென்னும் பொருளைக் காட்டுகின்ற புறம் என்னுஞ் சொல் மேற்காட்டிய வாக்கியத்தில் முதுகு என்றெண்ணப் படுகின்றது.

காலவாகு பெயர்

9. காரறுக்கப்பட்டது.
கருமையை யுணர்த்துகிற இக்காரென்னுஞ் சொல் அந்நிறத்தையுடைய மேகத்துக்காகி அது அம்மெகம் பெய்யுமாரிக் காலத்துக்காகி அது அக்காலத்து விளையு நெல்லை அந்தக்காலப் பெயரினாலெ பகுத்துணர்த்து கின்றது.
10. கார்த்திகை பூத்தது.
கார்த்திகைமாதம் என்பதினாலே அது விளைவிக்கிற காந்தள் புட்பமெனப் பொருள்படுகின்றது.

சினையாகுபெயர்

11. அறுபதமுரலும்.
அறுபதம். இவ்விடத்தில் இலட்சணையாக வண்டு என்பதைக் காட்டவுபயோகமாகின்றது.
12. புளி முளைத்தது.
இதுவும் புளியென்னுமொளியினாலே புளியம்பழமெனவும் மரமெனவும் கருதப்படுகின்றது.

குணவாகுபெயர்

13. நீலஞ் சூடினாள்.
நீலமென்னுஞ் சொல்லினாலந்நிறத்தையுடைய குவளைப் பூவெனக் கொள்ளப்படுகின்றது.
14. உலகங்கொடிது.
உலகமென்னுமொழியினால் சனங்களென்ற ருத்தமாகின்றது.

3. The light is broken.
Here the Lamp-stick is meant by the light; and it is called தானியாகு பெயர் in Tamil.
4. A celebrated word.
This word signifies the book which is called by that word.
5. Beauty
This word signifies Rhetoric.
6. Teroovalloovar is a proper name.
It signifies the celebrated work complied by the author of that name. In short, by the name of the author his work is meant.

NOUNS DENOTING PLACES

7. The saval or the deity of fortune will remain agreeably in the mind.
The word அகன் which signifies place, conveys the meaning of mind in the above pharase.
8. A man having a javelin which threatens murder, and who was never seen show his back (meaning in battle).
The word புறம் which has the meaning of the tem exterior, is meant "முதுகு" or back in the above sentence.

NOUNS DENOTING TIME

9. The Car-paddy is reaped.
The word கார் signifies blackness as well as the cloud which has that colour. கார்காலம் signifies rainy season. The paddy cultivated in that season is distinguished by the Name of that season.
10. Kartighy month is in blossom.
By the month கார்த்திகை the Kaadel flower which it produces is meant.

OF NOUNS DENOTING LIMBS

11. The six feet hums.
The six feet are figuratively used here to signify the Bee.
12. The sour is grown.
This is also a figure. By the word sour, the Tamarind fruit and tree is meant.

OF NOUNS DENOTING QUALITIES

13. She adorned blue.
By the word blue, the Coovaly flower which is of that colour is meant.
14. The world is bad.
By the world (உலகம்) the people are meant.

தொழிலாகுபெயர்

15. வற்றலுண்டான்.

வற்றலென்னுமொழியினால் உலர்ந்த காய்கனிகளெனப் பொருளாகின்றன.

அளவைமுதலான வாகுபெயர்களாவன

16. அரை.

எண்ணை விளக்குமிவ்வார்த்தை இடுப்பையுமுணர்த்துகின்றது.

17. கால். – இஃது அவயவமாகிய காலையுணர்த்துகின்றது.

18. துலாக்கொல்.

இவ்வார்த்தையால் தராசுக்கோலென்றாம்.

19. நாழி

முகத்தலளவைக் கருவிபாகிய நாழியென்னுமிச்சொல்லி
னாலவ்வாறே யெண்ணப்படுகின்றது.

கீழத்தடி.

மேலத்தடி.

இம்மொழிகளினால் பயிர் நிலங்களெனப்படுகின்றன.

ஒன்றொழிபொதுப்பெயர் அல்லது ஆண்பாலையாவது பெண்பாலையாவது காட்டுகின்றமொழிகள்.

ஆயிரமக்கள் போர்க்குப் போயினார்.

மேலேமக்கள் என்னுஞ்சொல் போர் என்னுங் குறிப்பினால் ஆண்பிள்ளைகளை விளக்குகின்றது.

பெருந்தேவியின் பிரசவகாலத்தில் நால்வர் மக்களிருந்தார்கள்.

இவ்விடத்து மக்களென்னுஞ் சொல் பெண்களை மாத்திரங் கொள்ளுகின்றது.

பெற்றம் (காளை அல்லது பசு) இப்பெற்றம்பால் கொடுத்தது.

இவ்விடத்திற் பெற்றமென்னுஞ் சொல் பசுவென்பதை மாத்திரங் காட்டுகின்றது.

இப்பெற்றமுழவொழிந்தது.

இங்ஙனம் பெற்றமென்பது எருதை மாத்திரமுணர்த்து கின்றது.

இரண்டாவது விதி

ன், ள், ர், ய் என்னுமீறுகளில் முடிகின்ற பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் சிலவிடங்களில் அவைகளின் அயலெழுத்தாகிய ஆகாரம் ஒகாரமாகித் திரிகின்றன.

வில்லான்	வில்லோன்.
தொடியள்	தொடியோள்.
நல்லார்	நல்லோர்.
கொடுத்தாய்	கொடுத்தோய்.

மூன்றாவது விதி

வேற்றுமையுருபுகளும் தெரிநிலைவினைமுற்று பெயரெச்ச வினையெச்ச விகுதிகளும் எதிர்மறைபாங்காலத்து மியல்பாகவே யிருக்கும்.

உம்.:– குடத்தை வனைந்தான்.

வாளாலெறிந்தான்.

நடந்தான்.

நடந்த.

நடந்து.

OF NOUNS SIGNIFYING ACTIONS

15. He ate what was dry. By the word வற்றல் the dried fruits are meant.

NOUNS OF MEASURES, & C.

16. A half.

This word of number signifies also the hip.

17. A quarter. This signifies also leg.

18. The beam of a scale. By this word the scale also is meant.

19. A number

By this word the Vessel with which a measurement is made is likewise meant.

East stick.West stick. By these words the arable lands are implied.-(Vide See.33.of பெரியல்.)Words used in both sexes.'A thousand people went to war.

The word மக்கள் signifies men above by its being applied in the point of war.

At Peroondavie's labour there were four people.

Here the word மக்கள் means women alone.

A Bullock or Cow.

this பெற்றம் gave milk.Here the word பெற்றம் signifies Cow alone.This பெற்றம் left off ploughing.

Here the word பெற்றம் signifies an Ox alone.-(Vide See.1 of பொதுவியல்.)

RULE - II

The Substantives and verbs ending in ன், ள், ர், ம் change their preceding letter ஆ into ஓ on some accounts.A bow man.A woman wearing bracelets.Good people.You gave.- (Vide See.2.)

RULE - III

The particles denoting cases of nouns and the terminations of the Conjugated Verbs as well as Particles of both kinds பெயரெச்சம் and வினையெச்சம் do not undergo variations in the negative form of speech.

NEGATION

He would not make a pot.

NEGATION

He would not out with a sword.

NEGATION

He would not walk.

NEGATION

That which has not walked.

NEGATION

Not having walked – (Vide See.3)

நான்காவது விதி

வினைமுற்று பெயரெச்சம் வினையெச்சங்களினுடைய தனிவசனங்கள் கூட்டிடைச் சொல்லன்றியில் தொடர் வசனங்களா கின்றன. ஆனால் ஒரு எழுவாயை மாத்திரங்கொள்ளும்.

உண்டான் இருந்தான் ஓடினான் பாடினான் சாத்தன், கற்ற கேட்ட பெரியோய்,,உண்டு இருந்து கிடந்து தூங்கிப் போனான்.

ஐந்தாவது விதி

பெயர்ச்சொற்களுக்கு முன்னும்பின்னும் அடியில் வருகின்ற திருஷ்டாந்தாப்படிக்கு வினைச்சொல்லுபயோகிக்கப்படுகின்றது.

வந்தான் சாத்தன், சாத்தன் வந்தான்.

ஆறாவது விதி

1. ஒரு வினாவில் அஃறிணைப்பெயரும் ஆண்பாற்பெயரு மிணைந்து வருகிற போது வெவ்வேறு பாலைக்காட்டுகிற விகுதியானது வெளிப்படையா யிருக்க வேண்டும். அஃதாவது,

அவ்விடத்திற்றோன்றுகிற உரு கட்டையா மகனா.

தமிழ்வாக்கியத்தில் யா என்னும் வினாவிகுதி அஃறிணையையும் னா என்னும் விகுதி ஆண்பாலையும் காட்டுகின்றன.

மேற்காட்டிய வாக்கியம் திணை பேதத்தை விளக்காதிருக்கு மாயின் இலக்கணவழுவாம். அடியில் வருபவை இவ்விதியினுடைய வழுவாம்.

கட்டையாமகனா தோன்றுகின்றது.

கட்டையாமகனா தோன்றுகின்றான்.

இவ்வசனங்களில் வினாவழுக்களிருக்கின்றன.

2. வினாப்பொருளைக் கொடுக்கிற ஒரு வாக்கியத்தில் ஆண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் விரவிவருகையில் பாலைக் காட்டுகிற விகுதிகள் அடியில் வருகிறவுதாரணத்தின்படி வெளிப்படையாயிருக்க வேண்டும்.

அவ்விடத்திற்றோன்றுகின்ற உரு கட்டையாமகனா.

வழு

அவ்விடத்தில் மகனோ மகளோ தோன்றுகின்றான்.

3. ஒருமைபன்மை யென்னுமிரண்டெண்களையும் விளக்குகிற ஒரு வினா வசனத்தில் அவ்வெண்களுக்குரிய வெவ்வேறான விகுதிகள் அடியில்வருகிற திருட்டாந்தாத்தின்படி விளக்கமாயிருக்க வேண்டும்.

இச்செய்புக்கபெற்றம் ஒன்றோ பலவோ.

பசு அல்லது எருது ஆகிய பெற்றமென்னும் சொல் எண்ணைக்குறித்து யாதொரு விகற்பமும் பெறாமல் இரண்டெண்ணிலுமுபயோகப்படுகின்றது.

வினா அடியில் வருகிறபடிக்கு எழுதப்படுமாயின் சரியற்றதாயிருக்கும்.

இச்செய்யிற் புகுந்தது ஒன்றோ பலவோ இச்செய்யிற் புகுந்தன ஒன்றோ பலவோ.

அஃறிணையையும் ஆண்பாலையும் கொண்டிருக்கிற வினாவிற்கு விடைகொடுக்கிறபோது ஒரு பாலினுடைய விகுதி மற்றொன்றுக்காக வுபயோகிக்கப்படினும் அது இலக்கியமே. அதாவது,

அங்ஙனந்தோான்றுகிற உரு கட்டையவ்வன்.

அங்ஙனந் தோன்றுகின்ற உருமகனன்று.

RULE IV

Simple sentences consisting of the conjugated Verbs; and of both kinds of particles (பெயரெச்சம் and வினையெச்சம்) form members of a compound sentence without a connecting particle but with an agent.

Sautten ate, was, ran, sang.. Ye who are learned heard.He slept, having eaten, sat down, lain.-(Vide See.4)

RULE - V

The verb is placed both before and after nouns, as in the following example. -(Vide Soo).

RULE - VI

1. When nouns of the Masculine and Neuter Genders come together in a sentence of interrogation, the termination denoting the different sexes should be expressed:Namely,

Is the figure which appears there a wood or man?

IN the Tamil sentence the termination of the interrogatory யா shows the Neuter Gender, and termination னா the Masculine Gender.The above phrase will be ungrammatical if no such distinction is made; as to sexes.The following is the violation of this rule.

Is that which appears there wood or man?

Is it a man or wood which appears there?

In these phrases interrogations are erroneous.

2. When nouns of Masculine and Feminine Genders come together in a sentence of interrogation, the terminations denoting sexes should be expressed as in the following example.

Is it a man or women that appears there?

VIOLATION

3. In a sentence of interrogation which comprises both singular and plural numbers the different terminations of the respective numbers should be expressed as in the following example.

Is the பெற்றம் which entered the field one or several? - The word பெற்றம், a Cow or Bullock, is used in both numbers without any variation on account of number.The question will be incorrect if written as follows.Is it one or several ones that entered the field?

When answers to interrogations comprises both Neuter and Masculine Genders, the termination of one sex is used for the other and it is still grammatical: Namely,The figure that appears there is not a wood.

The figure that appears there is not a man,- (Vide Soo. 25)

ஏழாவது விதி

1. ஒரு வாக்கியத்தில் ஒருயுவர்திணையாண்பாற் பெயரும் அஃறிணையாண்பாற் பெயருமிணைந்திருக்கிற பொது முதலிற் சொன்ன ஆண்பாற் பெயரினுடைய விகுதியெ இருதிணைக்கு முதவுகின்றது.

சான்றோன் திங்களுக்குச் சரியாவன் திங்கள் சான்றோனுக்குச் சரியாகுமென்றெழுதுகிறதற் குமாறாக திங்களுஞ் சான்றோனுஞ் சரியாவன என எழுதப்பட்டிருக்கலாம்.

சான்றோனும் திங்களும் ஒருவரையொருவர் ஒப்பர்.

2. ஒரு வாக்கியத்தில் ஒரு அஃறிணைப் பெயரும் ஆண்பாற் பெயரும் விரவி வருகையில் முதலிற்காட்டிய பெயரினுடைய விகுதியே இருதிணைக்குமுதவுகின்றது.

குருடனும் ஊமையும் பலர் பசுக்கள் பல என்றெழுதுவதற்குப் பிரதியாக குருடனும் ஊமையும் பலவென்றெழுதப்படலாம்.

3. ஒரு வாக்கியத்தில் வெவ்வேறு பால்களையுடைய உயர்திணைப்பெயர்களும் அஃறிணைப் பெயர்களுங் கலந்து வருகையில் எந்தப் பால் விகுதியையுடைய பெயர்களேனும் மற்றவைகளனு மதிகமாயிருக்குமாகில் அவ்வதிகத் தொகைப்பட்ட பெயர்களினுடைய விகுதி திணையைக் குறிக்கிறயாவற்றிற்குமுதவாநின்றது.

பார்ப்பார்தவர் சுமந்தார் இவர்கட்கு எனவும் பசு குதிரை இவைகட்கு எனவும் எழுதவேண்டியதற்கு வேறாக பார்ப்பார் தவர் சுமந்தார் பசு குதிரை இவர்கட்கு என்றெழுதக் கூடும்.

4. ஒரு வாக்கியத்தில் ஆண்பாற் பெண்பாற்பெயர்கள் ஒன்றாய் வருகிறபோது இருபாற்கும் வேறுபாடு காட்டப்பட வேண்டியதில்லை. (எவ்வாறெனில்) ஆண்பாலினும் பெண்பாலிழிந்த தாகையால் ஆண்பால் விகுதியே இரண்டிற்குமுதவுகின்றது.

அவற்றின் உதாரணம் அடியில் வருகின்றது.

அவனுமவன்றையலுமாண்டிலன்.

எட்டாம் விதி

பலபெயர்களையும் பல வினைகளையுங் கொண்டிருக்கிற சிலவாக்கியங்கள் அடியில் வருகிறவுதாரணத்தின்படி சாதாரணமாய் பொருள்கொடுக்கிற மற்ற வினைகளுடன் சம்பந்தப்படுகிற ஒரு வினையையீற்றினிற்கின்ற பெயர்க்குச் சேர்க்கப்படுவதனாலே உண்டாகக்கூடும்.

கறியைத் தின்றான்.

சோற்றை விழுங்கினான்.

நீரைக் குடித்தான். என எழுதவேண்டியதற்கு மாறாக கறியைச் சோற்றை நீரை உண்டான் என எழுதக் கூடும்.

ஒன்பதாம் விதி

ஆண்பாற் படர்க்கையொருமையில் வழங்குகிற சுட்டுப்பெயரை யுயர்வுப்படுத்த வேண்டியதற்காகப் பன்மையிலுமுபயோகிக்கக் கூடும்.

RULE - VII

1. When a noun of superior order of Masculine Gender and that of Neuter Gender are united together in a sentence, the termination of the noun of the former Gender answers for both sexes.

Instead of writing சான்றோன் திங்களுக்குச் சரியாவன், திங்கள் சான்றோனுக்குச் சரியாகும் it may be written திங்களும் சான்றோனும் சரியாவன.

The wise man and moon make equal the one to the other.

2. When a noun of Neuter Gender and one of Masculine Gender are united together in a sentence, the termination of the former noun answers for both sexes.

Instead or writing குருடனும் ஊமையும் பலர், பசுக்கள் பல. It may be written குருடனும் ஊமையும் பசுக்களும் பல.

3. When nouns of superior order and those of inferior order of different Genders are united together in a sentence, if the nouns of any Genders be of greater number than that of the rest, the termination of the nouns of greater number answers for all in point or sex. Instead of writing that பார்ப்பார்தவர் சுமந்தார் இவர்கட்கு and பசு குதிரை இவைகட்கு it may be written பார்ப்பார் தவர் சுமந்தார், பசு குதிரை இவர்கட்கு.

4. When nouns of masculine and feminine gender come together in a sentence, no distinction of sexes is shown; because, the termination of the masculine gender serves for both, as the feminine gender is lower than maculine.

The Example is as follows:

He and his wife did not die.-(Vide Soo.27.)

RULE - VIII

Several sentences containing several verbs and nouns may be made one by placing one verb agreeing with the other verbs in meaning in general to the last noun, as in the following example.

Instead of writing "கறியைத் தின்றான்," "சோற்றை விழுங்கினான்," "நீரைக் குடித்தான்."

It may be written கறியை சோற்றை and நீரை உண்டான். (Vide Soo.27)

RULE - IX

For the sake of making honour, a Pronoun in the third person singular of the Masculine Gender may be used in the plural number also.

(இயல்புவசனமாகிய) அவன் வந்தான் என்று சொல்வதற்கு வேறாக அவர் என்னும் பன்மைச்சுட்டுப்பெயரை அடியில் வருகிறவுதாரணத்தின் படி அதற்குப் பன்மை வினையைச் சேர்த்து ஒருமையைக் காட்டுகிறவிடத்தில் நாம் உபயோகித்து வர வேண்டியது.

பத்தாம் விதி

1. சில தருணங்களில் ஆண்பாற்பெயர்கள் உயர்வைக் காட்டுகிற விஷயத்தில் பெண்பால் விகுதிகளைப் பெறாநின்றன. தாதாய் முவுலகுக்குந் தாய்.

2. ஆண்பாற்பன்மையில் வழங்குகின்ற சுட்டுப்பெயர்கள் இழிவைக் காட்டுகிற விஷயத்தில் ஒருமை விகுதியைப் பெறுகின்றன.அதாவது,

எனைத்துணையாரயினு மென்னாந்தினைத் துணையுந்தோரான் பிறனில் புகல்.

மேற்காட்டியவாக்கியத்தில் அவர் என்னும் பன்மைச் சுட்டுப்பெயர்க்கு வேறாக அவன் என ஒருமைச்சொல் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது.

3. ஆண்பாலொருமையிலிருக்கிற ஒருபன்மைச்சுட்டுப்பெயர் அவமானப்படுத்துகிற விஷயத்தில் அஃறிணை விகுதியைப் பெறுகின்றது.

இவனில் லஞ்சிவாழுமெருது.

4. உயர்திணையாண்பாற் பெண்பாற்களின் பன்மைப் பெயர்கள் சிலதருணங்களில் அஃறிணையாக வழங்கப் படுகின்றன.

அவையாவன

தம்பொருளென்பர் தம்மக்கள்.

5. அஃறிணையொன்றன்பாலையுடைய பெயர் உயர்வுப் படுத்துகிற விஷயத்தில் பலர்பால் விகுதிகளைப் பெறுகின்றது.

ஒகிளியாரே.

6. விரைவு அபாயம் தெளிவு இவ்விடயங்களில் அடியில்வருகிற திருஷ்டாந்தாப்படிக்கு ஒரு உரித்தான காலத்துக்குப் பிரதியாக முக்காலங்களிலொன்று வழங்கப் படுகின்றது.

ஒருவேலையாள் விளிக்கப்பட்டபோது அவன் விரைவைக் காட்டவந்தேன் என உத்தாங்கொடுக்கிறான் அது அவன் வருகிறதற்குமுன் இறந்தகாலத்திலிருக்கின்றது.

வெள்ளத்தினீந்தினாற் செற்றாய்.

மேற்காட்டிய தமிழ்வாக்கியத்தில் எதிர்காலத்து இறந்தகாலம் வழங்கியிருக்கின்றது.

எறும்பு முட்டைகொண்டு வெளியேறுமாகின் மழை பெய்தது.

இந்தத் தமிழ் வாக்கியத்திலும் எதிர்காலத்தினிடத்து இறந்தகாலம் வழங்கியிருக்கின்றது.

7. ஒரு பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமடங்கியிருக்கிற ஒருவாக்கியத்தில் முக்கியகாலந்தோன்றாவிடத்து அடியில் வருகிறவுதாணரத்தின்படிக்கு இறந்தகாலம் எதிர்காலங்களி னிடத்தில் நிகழ்காலம் உபயொகிக்கப்படுகின்றது.

நாம் விளையாடுஞ்சோலை.

இதில் நிகழ்காலமாத்திரம் உபயோகிக்கப்பட்டிருக்கினும் இந்த வாக்கியம் முக்காலங்களினுமமைக்கப்படும்.

Instead of saying அவன் வந்தான் which is a regular construction, we make use of the plural pronoun அவர் in the place of the singular number, adding plural verb to it, as in the following example அவர் வந்தார். -(Vide Soo.28.)

RULE - X

1. Nouns of Masculine Gender on some occasions take the female terminations in cases in which eminence or preference is shown. generous man ! you are mother of the three worlds.

2. Personal pronouns in the Masculine Gender of the plural number take the singular termination in case of expressing contempt. **Namely,**

However great one may be, what does it avail if without at all considering his guilt he goes unto the wife of another? Instead of the plural pronoun அவர் the singular one அவன் is used in the above phrase.

3. A plural pronoun in the Masculine Gender of the singular number takes the termination of the Neuter Gender in case of contempt.From his living in fear of his wife he is a bullock.

4. Plural nouns of both sexes of superior order are sometimes used as nouns of Neuter Gender.**Namely**

They call their Children their property.

5. Neuter noun of the singular number takes plural terminations of the Masculine and Feminine Gender in case of exaltation. O! Parrots.-(Vide Soo.28)

6. In cases of rapidity, danger, and foretelling any of the third tenses is used instead of the peculiar one as in the following examples. When a servant is called, he to show quickness, answers வந்தேன் (which is in past tense) before he actually arrives.If you swim when there is inundation you will die.Past tense is used in the place of future in the above Tamil Phrase.If ants come out with their eggs it will rain.

In this Tamil phrase also the past tense is used in the place of future.

7. When no particular time is used in a sentence consisting of a noun and verb, the present tense is used in the place of the past and future tenses also, as in the following example.:-The Grove in which we play.

This phrase may be construed in the three tenses, although the present tense alone is used in it.-(Vide Soo.33)

பதினொன்றாம் விதி

ஒரு வாக்கியத்தில் மாத்திரையினளவை நிறைக்கவழங்குகிற இடைச்சொற்களும் விரைவு கோபம் உவப்பு பயம் வருத்தம் இவைகளைக் காட்டுகிற பெயர்ச்சொற்களும் இரண்டு முதல் நான்கீறாகவொன்றின் பின்னொன்ற கவடுக்கிக் கூறப்படும்.

அன்றே அன்றே.

இவ்விரண்டு ஏகாரங்களும் (இடைச்சொற்கள்) ஈறுகளிலடுக்கியிருக்கின்றன.

நல்குமே நல்குமே நல்குமே நாமகள்.–ஒரேவகையான இடைச்சொற்களிவிடத்து மூன்று தாரமடுக்கிநின்றன.

பாடுகோ, பாடுகோ, பாடுகோ, பாடுகோ.–இவ்விடத்து இடைச்சொற்கள் நான்கடுக்கின.

ஏ எ அம்பல் மொழிந்தனளாயே –இவ்விடத்தில் இவ்விடைச் சொற்களிரண்டு தரம் அடுக்கி வந்தன.

போ	போ.
எறி	எறி.
வருக	வருக.
பாம்பு	பாம்பு.
வாழேன்	வாழேன்.

போ	போ	போ.
எறிஎறி	எறி.	
வருக	வருக	வருக.
பாம்பு	பாம்பு	பாம்பு.
வாழேன்	வாழேன்	வாழேன்.

மேற்காட்டியிருக்கிற வுதாரணங்களின்படி இவ்விடத்தில் ஒவ்வொன்றையும் நான்குவிசை அடுக்கிச்சொல்லுக.

பனிரெண்டாம் வதி

இதனடியில் விவரிக்கப்படுகிறதுபோல் ஒரு வாக்கியத்தில் சிலதருணங்களில் ஒரேபொருளைத் தருகிறசொற்களிரண்டு இணைந்து வருகின்றன. :– மீமிசைஞாயிறு. புனிற்றிளங்கன்று. உயர்ந்தோங்கும் பெருமலை.

பதிமூன்றாம் விதி

ஒரு முடிவான தொகையை அவற்றிற்குரிய பெயர்களுக்குமுன் புணர்த்தப்பட்டிருக்கின்றதாகிய ஒரு வாக்கியத்தில் (கூட்டிடைச்சொல்லாகிய) உம். என்னுமிடைச் சொல்லை அந்த வாக்கியத்தை யிலக்கணப்படுத்த வுபயோகிக்கப்பட வேண்டும். மேற்கண்ட விதியே வெளிப்படையானவையும் கிடைத்தற்கரிதானவையுமான பொருள்களைக் கொண்டிருக்கிற வாக்கியங்களுக்குமுரித்தாயிருக்கின்றது. அடியிற்காட்டப்படுகிற உதாரணங்களிருவகை விதிகளுக் குமாம்.

தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார். ஐம்புலனையுமடக்கு. மண்ணினாற் படமுமில்லை. ஒளிமுன்னிருளுமில்லை.

RULE - XI

The particles which are used in a sentence to supply the defect of quantity, and the nouns denoting haste, anger, gladness, fear and pain, may be repeated one after another from two to four.

That day that day.

The two எ (which are particles) are used repeatedly in terminations.

The Goddess of learning நாமகள் will bestow, bestow, bestow.

The same particles are used here thrice.

Sing thou, sing thou, sing thou, sing thou,

Here the particles are used four times.

The mother speaks ill of me.

Here the particles are twice used in the sentence.

Go	Go
Beat	Beat
Come	Come
Snake	Snake
I can not live	I can not live

Go	Go	Go
Beat	Beat	Beat
Come	Come	Come
Snake	Snake	Snake
I can notlive	I can not live	I can not live

Repeat here each of the above examples four times-(Vide Soo.44)

RULE - XII

Two synonymous terms are on some occasions used together in a sentence as hereunder described.

The sun is above

A young calf.

A lofty hill.-(Vide See.47.)

RULE - XIII

In a sentence in which an aggregate number is prefixed to nouns to which they relate, the particle (conjunction) ought to be used to render the sentence grammatical. The same rule is applicable to the sentences in which things which can not possibly exist are expressed.

The following are examples for both rules.

The three Kings of the Tamil country have come.

Govern the five senses. No cloth is made with mud. There is no dark before the light -(Vide Soo.48)

பதினான்காம் விதி

1. அடியில் வருகிறவுதாரணப்படிக்கு உலக வழக்கத்தில் முதற்பொருளையும் அதைச் சார்ந்த சினைப்பொருளையுங் குறிக்கிற ஒரு பெயர்ச்சொல்லுக்கு ஒரு பண்புச் சொல்லைப்பார்க்கினுமதிகமாய் முன்வைக்கப்படுகின்றதில்லை.

வேற்கையரசன்.

முழங்குதிரைக்கடல்.

2. வேறுவகையான பெயர்ச்சொற்கடங்கியிருக்கின்ற மேற்காட்டிய விஷயத்திற்றானே இரண்டு பண்புச் சொற்கள் அவற்றிற்கு முன்வைக்கப்படலாம். அதாவது,

பருத்த சிவந்த குதிரை

3. செய்யுளில் சினைப்பெயர்களுக்குமுன் ஒன்று அல்லது இரண்டு பண்புச் சொற்கள் வைக்கப்படும்.

பெருந்தோள்.

சிறுமருங்கில்.

கருநெடுங்கண்.

பதினைந்தாம் விதி

ஒரு எழுவாயும் தன்வினையுங் கலந்துவருகின்ற ஒரு வாக்கியத்தில் வினையினாலே விளக்கப்பட்டிருக்கிற பயனை யுணர்த்துகின்ற காரணத்தை அடியில் வருகிறவுதாரணத்தின்படி எழுவாய்க்குமுன் வைக்கத்தக்கது.

கடுவுங் கைபிழியெண்ணையும் பெற்றமையான்மயிர் நல்லவாயின.

பதினாறாம் விதி

ஈ, தா, கொடு என்னும் வினைச்சொற்கள் தருதல் என்னும் ஒரே பொருளை விளக்கினும் அடியில் வருகிறவுதாரணத்தின்படி அவைகள் புணருகிறதற்குரித்தான பெயர்களுக்குச் சேர்க்கப்பட வேண்டும்.

இறைவனே யீ.

தோழாதா.

அடா கொடு.

பதினேழாம் விதி

உயிரில்லாத பொருள்களை உயிருள்ளவைபொலும் அசைவுள்ளவை போலும் பேசப்படுகிறபடியினாலெ அடியில் வருபவை உருவ கவணியாம்.

இரவெலாநின்றாயீர்ங்கதிர்த்திங்காள்.

பகைமையுங் கெண்மையுங் கண்ணுரைக்கும்.

நான்காவதிகாரம்

இது உயிர் முதலும் உயிரீறும் மெய்ம்முதலும் மெய்யீறுமாகிய பகாப்பதம் பகுபதம் என்னுமிருமொழிகளும் வேற்றுமையிலாவது அல்வழியிலாவது புணருகையில் எழுத்துக்களின் இயல்பு தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களை யுணர்த்துகின்றது.

RULE - XIV

1. In common conversation no more than one adjective should be prefixed to a substantive denoting both the principal object and its number conjointly, as in the following example.

A King having a javelin in the hand.

The roaring sea of waves.

2. In similar cases where nouns of other kind are used two adjectives may be prefixed to it. **Namely**

A big and red horse.

3. In poetry one or two adjectives may be placed before the nouns of limbs.

A big shoulder.

A thin hip.

An eye broad and black.-(Vide Soo.52)

RULE - XV

In a sentence in which an agent and neuter verb are joined together, the cause producing the effect which is expressed by the verb ought to be placed before the agent, as in the following example.

The hair became better from its having been dressed with pomatum and oil.-(Vide Se.54)

RULE XVI

Although the verbs ஈ, தா, கொடு convey all the same idea, namely, give, yet they ought to be added to the appropriate nouns with which they ought to be connected, as in the following example.

O God ! grant it.

O companion ! bestow it.

O my fellow ! give it -(Vide Soo.56)

RULE XVII

The following is personification by which life and action are attributed to inanimate objects.

O Moon emitting cold rays ! didst thou stand during the whole night?

The eyes will bespeak enmity and friendship.-(Vide See.57)

PART - IV

It treats of unchangeable state, variation, augmentation and omission of letters in the connection of simple or compound words composed with or without cases ending in vowels or consonants with like words beginning with consonants or vowels.- (Vide Soo. 1, 3, 4 and 7 of உயிரீற்றுப்புணரியல் in நன்னூல்)

ஒன்றாவது பிரிவு

வேற்றுமையைக் காட்டுகிற இடைச்சொற்கள் அல்லது உருபுகள்.

ஐ.	இன்.
ஆல்.	அது.
கு.	கண்.

அடியில் காட்டப்படுகிற திருஷ்டாந்திரப்படிக்கு அவைகள் சம்பந்தப்படுகிற சொற்களில் தொக்கியாவது தொகாமலாவது விளக்கப்படும்.

நிலத்தைக் கடந்தான்.
அவனைக் கல்லாலெறிந்தான்.
அவன் சாத்தனுக்கு ஒரு மகன்.
அவன் ஊரினின்றும் போய்விட்டான்.
அது சாத்தனுடைய கை.
மலைக்கண் வீழருவி.
இந்த சொற்களிலெல்லாம் வேற்றுமை தொகாமனின்றன.
நிலங்கடந்தான்.
கல்லெறிந்தான்.
சாத்தன் மகன்.
ஊரை நீங்கினான்.
அது சாத்தன் கை.
மலை வீழருவி.
இம்மொழிகளில் வேற்றுமை யுருபுகள் தொக்கி நின்றன.

அல்வழியில் வழங்குகின்ற சொற்கள் பதினான்கு வகையாய் அடியில் வருகின்றன. அவையாவன.

1. காலங்கரந்த பெயரெச்சம் வினைத்தொகை. உம். கொல்களிறு.
2. பண்புத்தொகை. உ–ம்.:– கருங்குதிரை முதலானவை.
   இருபெயரொட்டுப் பண்புத்தொகை. உ–ம்.:– ஆயன் சாத்தன் முதலானவை.
3. உவமைத்தொகை. உ–ம்.:– மதிமுகம் முதலானவை.
4. உம்மைத்தொகை. உ–ம்.:– இராப்பகல்.
5. அன்மொழித்தொகை. உ–ம்.:– தாழ்குழல்.

அடியில் வருகிற சொற்கள் அல்லது சந்திகள் எப்பொதும் வெற்றுமை யுருபுகள் தொகாமல் வழங்குகிறவைகள்.

6. எழுவாய்ச்சந்தி.
   சாத்தன் வந்தான்.
7. விளிவெற்றுமைச்சந்தி.
   கொத்தா வா.
8. பெயரெச்சச்சந்தி.
   வந்தான் சாத்தன்.
9. வினையெச்சச்சந்தி
   அவன் வந்து பொனான்.
10. தெரிநிலைவினைச்சந்தி.
    வந்தான் சாத்தன்,
11. குறிப்புவினைச்சந்தி.
    குழையன் கொத்தன் அல்லது குழையையுடையவனான கொத்தன்.

CHAPTER - I

THE PARTICLES WHICH DENOTE CASES ARE THESE

They will either be expressed or understood in the words to which they relate, as in the following examples.

He measured the land.
He pelted hime with a stone.
He is a son of Sautten.
He went away from the village.
It is Sautten's hand.
A torrent from a hill.

in all these words the cases are expessed.

He measured the land.
He pelted him with a stone.
He is a son of Sautten.
He went away from the village.
It is sautten's hand.
A torrent from a hill.

In all these word the cases are understood.- (Vide Soo.2.)

The words which have no cases are of the following fourteen sorts, viz.

1. Verbs having ellipsis of tenses; such as,
   A killing elephant.
2. Adjectives having ellipsis of qualities; such as,
   A black horse, &c.
   Double nouns, the one standing as adjective and the other as substantive; such as,
   The shepherd Sautten, &c.
3. Words of comparison in which the particle denoting comparison is understood; as,
   A face like the Moon, &c.
4. Words having ellipsis of connecting particles.
   Day and Night.
5. Ellipsis of Nouns conveying double meaning.
   A woman having long hair.
   The following parts of speech are always expressed in phrases.
6. Nouns in the nominative case.
   Sautten came.
7. Nouns in the vocative case.
   O! Cottah, come.
8. Participles of nouns or relative pronouns.
   Sautten who came.
9. Participles of nouns relating to verbs.
   Having come he went away.
1o. Verbs in conjugation.
   Sautten came.
11. Nouns and pronouns derived from the act of verbs or verbal nouns.
   Kotten who became weaver of car-jewels.

12. இடைச்சொற்சந்தி.:– மற்றொன்று.
13. உரிச்சொற்சந்தி.:– கடிக்கமலம்.
14. அடுக்குத்தொடர்ச்சந்தி.:–பாம்பு பாம்பு.

இவ்விலக்கண போதகராகிய ஆசிரியர் இவ்வியலுணர்த்தும் பலவிதிகளைப் பிரசங்கிக்கத் தொடங்குமுன் யாவற்று பதங்களிலும் மெய்யெழுத்துக்களுயிரெழுத்துக்களுடன் சேர்ந்து ஒன்றொடொன்று புணருவதனாலுண்டாகின்றவொரு பொதுவான விகாரத்தை இவிடத்தில் விளக்குகின்றார்.அதாவது,

மெய்யெழுத்தை யீற்றிலுடைய வொருவொல் உயிரெழுத்தை முதலிலுடையவொரு சொல்லுடன் புணர்க்கப்படுமாகில் அடியில் வருகிறவுதாரணத்தின்படி அம்மெய்யெழுத்தானது உயிரெழுத்தி னுடலாகின்றது.

தோன்றல்+அழகன் = தோன்றலழகன்.

தேன்+அருவி = தேனருவி

அடியில்வருகிறவைபோல் அவற்றின் புணர்ச்சியில் எழுத்துக்கள் விகாரப்படாமலியல் பாயிருக்கிற சொற்கள்

பொன் + மலை = பொன்மலை

ஒளி + மணி = ஒளிமணி.

எழுத்துக்கள் ஒன்றொன்று சந்திக்கையில் தோன்றல் விகாரமாகிற சொற்கள் அடியில் வருகிறவுதாணத்திற் பார்க்கப்படும்.

பூ + கொடி = பூங்கொடி.

எழுத்துக்கள் ஒன்றொடொன்று புணருகையில் திரிதல் விகாரமாகிற சொற்கள் அடியில் வருகிறயுதாரணத்திற் பார்க்கப்படும்.

பல் + தலை = பஃறலை.

சொற்களொன்றொடொன்று புணருகையில் கெடுதல் விகாரமாவதிப்படியென்பதை அடியில் வருகிறவுதாரணம் விளக்கும்.

நிலம் + வலயம் = நிலவலயம்.

ஒரு உயிரெழுத்தை யீறாகவுடைய சொல் மற்றொரு வுயிரெழுத்தை முதலிலுடைய சொல்லொடு சேருகிற வகையடியிலிருக்கின்றது.

அ, ஆ, உ, ஊ, ஒ, ஒள என்னுமுயிரெழுத்துக்களை யீறாகவுடைய சொற்கள் மற்றோருயிரெழுத்தை முதலிலுடைய சொற்களொடு கூடுகையில் பின்னின்றவுயிர்கள் (வ) மாகத்திரிகின்றன. **உ–ம்.:–**

12. Particles.:- Another
13. Adjectives.:- Smelling taumeray flower
14. Double or more words repeated one after another
    Snake, Snake.

The teacher of the Grammar, before proceeding to explain the different rules which this chapter professes to teach, records have a general change of consonants into vowels in all sorts of words in connecting with each other.

That is to say.

If a word ending in a mute consonant is to be united with a word beginning with a vowel, the mute consonant becomes the body of the vowel, as in the following example:

The King is beautiful.

The torrent of honey.

The words in the union of which the letters do not undergo any change are like the following ones:

Gold rock.

A bright precious stone-(Vide Soo 3)

The words in the union of which augmentation of letters occurs will be seen in the following example:

A reen of flower.

The words in the connection of which variation of letters occurs will be seen in the following example:

Several heads

The following example will show how the omission of letters occurs in the union of words:

The extent of the ground.-(Vide Soo. 4 & 7)

The following is the mode in which a word ending in a vowel is united with the word having a vowel in its beginning.

When the words having vowels in the beginnings are to be united with the preceding words ending in vowels அ, ஆ, இ, ஈ, ஒ, ஓ the latter are changed into வ் as

விள + அழகு = விளவழகு
பலா + ஆகும் = பலாவாகும்.
கடு + இல்லை = கடுவில்லை
பூ + ஈடு = பூவீடு
கோ + உண்டு = கோவுண்டு
வௌ + இனான் = வௌவினான்.

இ, ஈ, ஐ என்னுமூன்றுயிரெழுத்துக்களுமீறாகவருகிற சொற்கள் உயிரெழுத்துக்களை முதலாகவுடைய சொற்களோடு சந்திக்கையில் பின்னின்றவுயிர்கள் (ய) மாகத்திரிகின்றன. **உம்.**

திரி + அரிது = திரியரிது
தீ + உளது = தீயுளது
தினை + இனிது = தினையினிது

முதலிலுயிரெழுத்துக்களைப் பெற்றுத் தொடர்ந்துவருகிற சொற்களோடு மற்றொரு சொல் புணரப்படும் போது அம்மொழிக்கீறான எகாரவுயிர் வகரத்தையாவது யகரத்தையாவது அதனுடைய விகுதியாகப் பெற்றிருக்கலாம். **உம்.**

சே + அரிது = சேயரிது.
சே + அரிது = சேவரிது

வினாவெழுத்தாகிய எ சுட்டெழுத்துக்களாகிய அ, இ, உ இவைகள் உயிரெழுத்துக்களை முதலிலுடைய சொற்களை விகுதியாகத் தொடருகையில் வருமொழி முதனிற்குமுயிர்கள் வகரமாகத் திரிந்திரட்டிக்கின்றன. உம்.

எ	+	அணி	–	எவ்வணி.
அ	+	அணி	–	அவ்வணி.
இ	+	அணி	–	இவ்வணி.
உ	+	அணி	–	உவ்வணி

ஞ, ந, ம, ய, வ என்னுமிவ் வுயிர்மெய்யெழுத்துக்களை முதலிலுடைய சொற்கள் உயிரெழுத்துக்களை யீறாகவுடைய சொற்களோடு வேற்றுமையிலாவது அல்லவழியிலாவது புணர்க்கப்படும்போது அவ்வைந்து உயிர்மெய்யெழுத்துக்களும் விகாரப்படாமலியல்பாம்.

உ–ம்.;–

வேற்றுமை

விள + ஞாற்சி	= விளஞாற்சி
விள + நீட்சி	= விளநீட்சி
விள + மாட்சி	= விளமாட்சி
விள + யாப்பு	= விளயாப்பு
விள + வலுமை	= விளவலுமை

Velan tree is beautiful.
Jack tree will be observance.
There is no poison.
The flower is comparable.
There is a King.
He has usurped.

When the words having a vowel in the beginning are to be united with the preceding words ending in vowels. இ, ஈ, ஐ the latter three are changed into ய as,

The wick is scarcely to be had.
There is fire.
The corn teny is sweet.

The vowel எ which the preceding word may have had as its termination is changed into either வ or ய when the word is to be united with the following words having vowels in the beginnings, as:

The child is scarcely to be had.
The bullock is scarcely to be had.-Vide See.12)

The interrogatory letter and the demonstrative ones அ இ உ are changed into வ் which is doubled when those letters unite with vowels in the termination of the words following, as:

Which ornament.
That ornament
This ornament.
That ornament-(Vide Soo.13)

When the words having the consonants and ஞ, ந, ம, ய and வ in the beginning are to be united with preceding words ending in vowels, whether with or without cases, those five consonants do not undergo any change, as:

WITH CASE

The Velantree's	goodness
”	loftiness
”	value.
”	combination
”	handness.
”	case.

அல்வழி

விள + ஞான்றது = விளஞான்றது
விள + நீண்டது = விளநீண்டது
விள + மாண்டது = விளமாண்டது
விள + யாது = விளயாது
விள + வலிது = விளவலிது

வேற்றுமையிலாவது அல்வழியிலாவது (ய்) என்னுமெய்யெழுத்தை யீற்றிலுடைய உயிர்மெய்க்குறில்கள் ஞ, ந, ம என்னுமுயிர்மெய்யெழுத்துக்களை முதலாகவுடைய சொற்களொடு சேர்க்கப்படுகையில் பிந்தியவையிரட்டிக்கின்றன.

உ–ம்.:– வேற்றுமை

மெய் + ஞாற்சி – மெய்ஞ்ஞாற்சி
மெய் + நீட்சி – மெய்ந்நீட்சி
மெய் + மாட்சி – மெய்ம்மாட்சி

அல்வழி

மெய் + ஞான்றது – மெய்ஞ்ஞான்றது
மெய் + நீண்டது – மெய்ந்நீண்டது
மெய் + மாண்டது – மெய்ம்மாண்டது

மேற்கூறிய மூன்றுயிர்மெய்யெழுத்துக்களும் ஐயெழுத்துடன் புணரும்பொது இருவழியும் அவ்வாறே யிரட்டிக்கும் இருவழியென்பது வேற்றுமையிலாவது அல்வழியிலாவது என்பதாம். **உ –ம்.:–வேற்றுமை**

கை + ஞாற்சி – கைஞ்ஞாற்சி
கை + நீட்சி – கைந்நீட்சி
கை + மாட்சி – கைம்மாட்சி

அல்வழி

கை + ஞான்றது – கைஞ்ஞான்றது
கை + நீண்டது – கைந்நீண்டது
கை + மாண்டது – கைம்மாண்டது

நொது என்னும் வினைச்சொற்களோடு சேருகிற சொற்களுக்கு முதலிலிருக்கின்ற வல்லினம் மெல்லினம் இடையின மென்னுமூவின மெய்யெழுத்துக்களும் அப்படி புணருங்காலத் திரட்டிக்கின்றன. உம்.

நொ + கொத்தா = நொக்கொத்தா
நொ + சாத்தா = நொச்சாத்தா
நொ + தேவா = நொத்தேவா
நொ + பூதா = நொப்பூதா.
து + கொத்தா = துக்கொத்தா
து + சாத்தா = துச்சாத்தா
து + தேவா = துத்தேவா
து + பூதா = துப்பூதா
நொ + ஞெள்ளா = நொஞ்ஞெள்ளா
நொ + நாகா = நொந்நாகா
நொ + மாடா = நொம்மாடா

The Velan tree is good.
" lofty.
" valuable.
Which is Velan tree?
The Velan tree is hard.

When the short consonants ending in mute consonant are to be united with the words in cases or in no cases but having in their beginning the consonants the latter are doubled, as: **IN CASE**

The body's goodness.
" loftiness
" value.

IS NO CASE

The body is good.
" lofty.
" valuable.

The above three consonants are in like manner doubled when they unite with the letter ஐ in either case; that is when it is in cases or when in no cases.

As: **IN CASE**

The hand's goodness.
" loftyness.
" value.
The hand is good.
" lofty
" valuable

The hard, soft and middle consonants which are at the beginning of words connecting with verbs நொ, து are doubled on that occassion:As:

Suffer Cottah,
Sattah,
Tava
and Pootteh.
Eat Cottah,
Sattah,
Tevah,
and Poodah.
Suffer Gnellah,
Nagah
and Maudah,

து	+	ஞெள்ளா	= துஞ்ஞெள்ளா
து	+	நாகா	= துந்நாகா
து	+	மாடா	= தும்மாடா
நொ	+	யவனா	= நொய்யவனா
நொ	+	வளவா	= நொவ்வளவா
து	+	யவனா	= துய்யவனா
து	+	வளவா	= துவ்வளவா

வேற்றுமைக்கண் உயர்திணை அஃறிணையென்னு மிரண்டாண்பாற்கும் பொதுவாய் வழங்குகிறபெயர்கள் க, ச, த, ப என்னுமெழுத்துக்களை முதலாகவுடைய சொற்களொடு புணருகையில் மேற்காட்டிய நான்கெழுத்துக்களும் விகாரப்படாம லியல்பாயிருக்கும்.

உ-ம்.:-

சாத்தன் + குறியன், சிறியன், தீயன், பெரியன்.

சாத்தன் + குறிது, சிறிது, தீது, பெரியது.

ஆண் + குறியன், சிறியன், தீயன், பெரியன்.

ஆண் + குறிது, சிறிது, தீது, பெரியது.

இம்மொழி இரண்டு பொருள்களைத் தருகின்றது. ஒன்று ஒரு மனிதனுடைய பெயராம் மற்றொன்று விலங்கின் ஆண்பாற்பெயராம்.

சாத்தன் + கை + செவி + தலை + புறம்

ஆண் + கை + செவி + தலை + புறம்

வேற்றுமைக்கண் உயர்திணைப்பெண்பாற்கும் அஃறிணைப் பெண்பாற்கும் பொதுவாயிருக்கிறபெயர்கள் க, ச, த, ப களை முதலிலுடைய சொற்களொடு புணருங்கால் அந்நான்கெழுத்துக் களும் யாதொரு விகாரத்துக்கு முள்ளாகா ஒரொவழி அல்வழியில் விகாரப்படுவதுமுண்டு.

உ-ம்.:-

சாத்தி + குறியள் + சிறியள் தீயள் பெரியள்.

சாத்தி + குறிது, சிறிது, தீது, பெரிது.

தாய் + குறியள், சிறியள், தீயள், பெரியள்.

தாய் + குறிது, சிறிது, தீது, பெரிது.

வேற்றுமை.

சாத்தி + கை, செவி, தலை, புறம்,

தாய் + கை, செவி, தலை, புறம்.

அல்வழி

சாத்தி + பெண் = சாத்திப்பெண்

ஆண்பாலொருமை பன்மைகளினும் பெண்பாலொருமை பன்மைகளினும் வழங்குகின்ற ன், ள், ர் என்னுமீற்றையுடைய பெயர்கள் வேற்றுமையிலாவது அல்வழியிலாவது க, ச, த, ப களை முதலாகவுடை சொற்களோடு புணருமிடத்து அந்நான்கெழுத்துக் களும் தத்தம் நிலைமையினின்றும் வேறுபடாவாம்.

உ-ம்.:-

Eat Gnellah, Nagah and Maudah.
Suffer Yavauah and Valavah
Eat Yavanah and Valava - (Vide Soo.8.15 and 22)

When the word in cases and which are the same in the two sexes, namely உயர்திணை யாண்பால் and அஃறிணை யாண்பால் connect with words beginning with க் ச் த் and ப் the latter namely the four letters do not undergo any variation;As:

Sautten is short, young, bad, and tall.
The animal Sautten is short, young, bad, and tall.

NOTE

This word conveys two meanings; the one is name of a person and other is that of animal of masculine gender.

Sautten's hand, ear, head, and back.
The male's hand, ear, head, and back.

When the words in cases which are the same in the two sexes, namely உயர்திணைப் யாண்பால் and அஃறிணை யாண்பால், connect with the words beginning with க் ச் த் and ப் the letter, viz the four letters, do not undergo any variation; but it is other wise when those words are in no Cases.As:

The sattee is short, young, bad and tall.
The animal sattee is short, young, bad and tall.
The mother is short, young, bad and tall.

IN CASES

Sautee's hand, ear, head and back.
Mother's hand, ear, head and back

IN NO CASES

Sauthee who is a female or the female Sauttee.

When the words (whether in cases or in no cases) ending ண் ,ள், and ர் and which are of Masculine and Feminine Genders of both numbers connect with words having in this beginnings க, ச, த and ப the latter four do not vary their state.As

வேற்றுமை

ஊரன் + கை, செவி, தலை, புறம்.

அவன் + கை, செவி, தலை, புறம்.

அவள் + கை முதலாயின.

ஊரன் + குறியன், சிறியன், தீயன், பெரியன்

அவன் + குறியன் முதலாயின.

அவள் + குறியள் முதலாயின.

அவர் + குறியர், சிறியர், தீயர் பெரியர்.

ஊ என்னுமீற்றையுடைய ஆண்பாற் பெண்பாற்களி னொருமைப்பெயர்கள் வேற்றுமையிலாவது அல்வழியிலாவது க, ச, த, ப களை முதலாகத் தொடங்குகிற சொற்களோடு புணருங் காலத்து அந்நான்கெழுத்துக்களு மிரட்டிக்கப்படுகின்றன. உ–ம்.;–

வேற்றுமை

ஆடூ +	கை	= ஆடூக்கை
	செவி	= ஆடூச்செவி
	தலை	= ஆடூத்தலை
	புறம்	= ஆடூப்புறம்
மகடூ +	கை	= மகடூக்கை
	செவி	= மகடூச்செவி
	தலை	= மகடூத்தலை
	புறம்	= மகடூப்புறம்

அல்வழி

ஆடூ +	குறியன்	= ஆடூக்குறியன்
	சிறியன்	= ஆடூச்சிறியன்
	தீயன்	= ஆடூத்தியன்
	பெரியன்	= ஆடூப்பெரியன்
மகடூ +	குறியள்	= மகடூகுறியள்
	சிறியள்	= மகடூச்சிறியள்
	தீயள்	= மகடூத்தியள்
	பெரியள்	= மகடூப்பெரியள்

இருவழியினுமென்னும் வாக்கியத்தை இந்நூலாசிரியர் உபயோகப்படுத்து மிடங்கடோறும் அது வேற்றுமையின் கண்ணும் அல்வழியின் கண்ணுமென வமைத்துக்கொள்க.

ன் என்னுமீற்றையுடைய ஆண்பாற்சொற்கள் மொழிகளுக்கு முதலிலிருக்கிற க, ச, த, ப என்னுமெழுத்துகளைப் புணருகிறபோது ன் என்னும் விகுதிகெட்டுச் சில தருணங்களில் மேற்கூறிய வல்லினவெழுத்துக் களிரட்டிக்கின்றன. ஆயினும் சில தருணங்களில் அவைகள் விகாரப்படுகின்ற தில்லை.இவ்விதி வேற்றுமை அல்வழியென்னுமிருவழிக்குமுரித்து.

அப்படிப்பட்ட (ன்) என்னும் விகுதி மெல்லினத்தினுமிடை யினத்தினுஞ் சிலவெழுத்துக்களைக் கூடுகையிலும் அது கெட்டுப்போகின்றது. இது புணருகின்ற மொழிகள் அல்வழிச் சந்தியிலிருக்கின்ற போதுமாத்திரமாம்.

IN CASES

The land holder's hand, ear, head, and back.
His hand &c.
Her hand &c.
Their hand &c.

GENERAL RULES OF CONNECTION

IN NO CASES

The landlord is short, young, bad, and tall.
He is short, &c.
She is short &c.
They are short, young, bad and tall.

When the words of cases and no cases and of both Genders, Male and Female, in the singular number which end in உன connect with words beginning with க, ச, த, ப the latter are doubled, as:

IN CASES

The man's hand, ear, head, and back.
The women's hand, ear, head, and back.

IN NO CASES

The man is short, young, bad and tall.
The woman is short, young, bad and tall.

Whenever the teacher makes use of the phrase in both ways, it should be constructed as when in cases and when in no cases.

When the word ending in ன் and which is of Masculine Gender joining the hard letters க, ச, த, ப which may be the beginnings of words, the ன் termination is omitted, and the said hard letters are doubled on some occasions, but they are not varied on some other occasions.

This rule is applicable to both ways.

When such termination, namely ன், joins some of the soft and middle letters, it is omitted altogether. This takes place only when the joining words are in no cases, as:

வேற்றுமை

குமரன் கோட்டம் – குமரகோட்டம், குமரக்கோட்டம்.

அல்வழி

ஆசீவகன் + பள்ளி = ஆசீவகப்பள்ளி ஆசீவகன் பள்ளி.

வடுகன் + நாதன் = வடுகநாதன்

அரசன் + வள்ளல் = அரசவள்ளல்

அல்வழிக்கண் விளிவேற்றுமைகளைக் குறிக்கின்ற விகுதிகளாகிய ஆ யா என்னுமீற்றில் வருகின்ற சொற்கள் க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்களை முதலாகவுடைய சொற்களோடு கூடுகையில் அப்புணர்ச்சிக்கண் விகாரங்களுண்டாகா. உதாரணம்,

நம்பியா கொண்டான்
சென்றான்
தந்தான்
புகன்றான்

யா + குறிய
சிறிய.
தீய.
பெரிய.

நம்பி. கொள், செல்,
நம்பீ. து, புகல்.

விடலை கொள், செல்,
விடலாய் து, புகல்.

கிள்ளை கொள், செல்,
கிள்ளாய் து, புகல்.
சாத்தி கொள், செல்,
சாத்தி து, புகல்
தாய் கொள், செல்,
தாயெ து, புகல்

ய், ர் என்னுமீற்றில் முடிகின்ற முன்னிலையொருமை பன்மைகளில் வழங்குகிற தெரிநிலைவினைமுற்றுக்கள் க, ச, த, ப என்னும் வல்லின வெழுத்துக்களைப் புணருகையில் அம்முடிவு விகாரங்களையடைவதில்லை. உ-ம்.

உண்டி கொற்றா.
உண்டனை சாத்தா.
உண்டாய் தேவா.
பூதா.
உண்டனிர் கொற்றரே.
உண்டிர். சாத்தரே.
தேவரே.
பூதரே.

IN CASES

Comaran's village.

IN NO CASES

There are double nouns.

Ascevagan and Pully.

These are also double nouns, the one becoming adjective in the other noun.-(Vide Soo.9 and 15).

When the words of no cases and which end in ஆ and யா. As well as the terminations denoting Vocative Case, connect with the words beginning with hard letters க, ச, த, ப no variations occur in the connection:

As,

Is it Number that purchased, went, gave and said
Which is short, Little, bad, and great.
O Numbee I Hear, go, eat and say.
O youth I hear, go, eat and say.
O Parrot I hear, go, eat and say.
O Sauttee I hear go, eat, and say.
O Mother I hear go, eat, and say.

When the conjugated verbs in the 2nd person of both numbers ending in ய் and ர் connect with hard letters க, ச, த, ப and the result is attended with no variations, as:

Thou Cottah, Sauttah, Tavah, Poodah, eat.
Ye Cottah, Sauttah, Tavah, Poodah, eat.

ழ் என்னுமீற்றையுடைய ஏவல்வினைகள் வல்லெழுத்துக்களுடன் கூடுகையில் அவைகளின் முடிவுகள் விகாரப்படுவதில்லை. **உ—ம்.;—**

தாழ் கொற்றா.
சாத்தா.
தேவா.
பூதா.

க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்களும் ங, ஞ, ந, ம என்னுமெல்லெழுத்துக்களும் இடையெழுத்தாகிய வகரமும் வினா வெழுத்தாகிய எ சுட்டெழுத்துக்களாகிய அ, இ, உ இவைகளுடன் கூடுகையி லிரட்டிக்கின்றன.

எ + குதிரை = எக்குதிரை
எ + சேனை = எச்சேனை
எ + தலை = எத்தலை
எ + பசு = எப்பசு
அ + குதிரை = அக்குதிரை
அ + சேனை = அச்சேனை
அ + தலை = அத்தலை
அ + பசு = அப்பசு
உ + குதிரை = உக்குதிரை
உ + சேனை = உச்சேனை
உ + தலை = உத்தலை
உ + பசு = உப்பசு
இ + குதிரை = இக்குதிரை
இ + சேனை = இச்சேனை
இ + தலை = இத்தலை
இ + பசு = இப்பசு
எ + ஙனம் = எங்ஙனம்
எ + ஙனம் = எஞ்ஞாலம்
எ + நாடு = எந்நாடு
எ + மனை = எம்மனை
அ + ஙனம் = அங்ஙனம்
அ + அஞ்ஞாலம்
அ + அந்நாடு
அ + அம்மனை
உ + ஙனம் = உங்ஙனம்
உ + உஞ்ஞாலம்
உ + உந்நாடு
உ + உம்மனை
இ + ங்னம் = இங்ஙனம்
இ + இஞ்ஞாலம்
இ + இந்நாடு
இ + இம்மனை
எ + வளை = எவ்வளை
அ + வளை = அவ்வளை
உ + வளை = உவ்வளை
இ + வளை = இவ்வளை

When the verbs in the Imperative Mood ending in œ unite with the hard letters, there results no variation: as,

Humble thou Cottah, Sauttah, Thevah, Poodah (Vide Soo. 11 and 15.)

The hard letters க, ச, த, ப, and soft letters ங, ஞ, ந, ம, and the middle letter வ, doubled, when they unite with the interrogatory letter எ and the demonstrative ones, as:

Which horse, army, head and cow.

That horse, army, head and cow.

This horse, army, head and cow.

Where
Which world
Which Country
Which house
There
That world
That country
That house
Here
This world
This country
This house
Which bracelet.
That bracelet.
This bracelet.

வினாவெழுத்தாகிய எகரமும் சுட்டெழுத்துக்களாகிய அகர இகர உகரங்களும் ய என்னும் இடையெழுத்துடன் புணருகையில் இடையில் வ் என்னுமொரு இடையெழுத்துத்தோன்றி முடிக்கின்றது. உம்.

எ + யானை = எவ்யானை

அ + யானை = அவ்யானை

உ + யானை = உவ்யானை

இ + யானை = இவ்யானை

அகர எழுத்து ஆகாரமாகி அத்துடன் இகரவுயிரை முதலிலுடைய மொழிகள் வந்து புணருகையில் கடைசியிற் காட்டிய இகரவெழுத்து யகரமாகத் திரிகின்றது. உம்.

ஆ + இடை = ஆயிடை

கு, சு, டு, து, பு, று என்னும் குற்றுகரங்கள் உயிரெழுத்தை முதலிலுடைய மொழிகளுடன் கூடுகையில் அவற்றின் ஒற்றுக்களாகிய க், ச், ட், த், ப், ற் என்னும் எழுத்துக்களை மாத்திரம் விட்டுவிட்டு ஓடிப்போம் வருமொழி முதலினின்ற உயிரெழுத்துக்கள் அவற்றின் மேலேறி நிற்கும். **உம்.**

நாகு + அரிது = நாகரிது

எஃகு + அரிது = எஃகரிது

வாகு + அரிது = வாகரிது

சுக்கு + உளது = சுக்குளது

சங்கு + எளிது = சங்கெளிது

சார்பு + இனிது = சார்பினிது

மஞ்சு + உளது = மஞ்சுளது

பட்டு + இல்லை = பட்டில்லை

முத்து + உண்டு = முத்துண்டு

பண்பு + இனிது = பண்பினிது

குன்று + உயர்வு = குன்றுயர்வு

சிலவிஷயங்களில் அடியில் வருகின்றபடி இப்படிப்பட்ட விகாரமுண்டாகிறதில்லை.

விளியென்பது தன் முகமாகத்தானழைப்பதுவே.

ஆறாம் வேற்றுமைக்கு அதுவும் ஆதுவுமாம்.

மெல்லொற்றையும் இடையொற்றையும் தனிக்குற் றெழுத்தையும் அடுத்துவரும் உகரம் குற்றுகரமாகாது. அது முற்றுகரமெனப்படும்.

மண்ணு.

விம்மு.

கல்லு.

முள்ளு.

கதவு.

அது.

இது.

ஒரு.

திரு

In the connection between the middle letter ய and the interrogatory and demonstrative letters எ, அ, உ, இ, an addition of வ் results between the letters united: as,

Which Elephant.

That Elephant.

This Elephant.

When the letter அ becomes long ஆ and when the word beginning with the vowel இ joins with it, the latter is changed into ய, as,

That Place — (Vide soo.13.)

The letter உ (குற்றுகரம்) which becomes short when the hard bodies க, ச, ட, த, ப, ற in uniting with words ending in vowels, runs away leaving its bodies alone and the next vowels get over them, as,

Seldom is the buffalo,

Seldom Javelin

Seldom the grain varagoo.

There is ginger.

The chank can be easily had.

The dependence is good.

There is cloud.

There is no silk.

There is pearl.

Good quality is good.

The hill is high.

In some cases there does not occur such variation: as in the following example.

Vocative case is the calling of one person by another in person.

The 6th case is formed by the article அது and ஆது

The letter உ does not become short when it is borne by those soft and middle letters with which words begin and when it follows short single vowels and it is then called முற்றுகரம் or perfect உ.

முற்றுகரச்சொற்கள் உயிரெழுத்தை முதலாகவுடைய மொழிகளுடன் சந்திக்கையில் உகரம் அடியில் வருகிற பிரகாரம் தன்னுடைய உடலை அல்லது ஒற்றெழுத்தை விட்டுவிட்டுப் போய்விடுகின்றது.

கதவு + அழகு = கதவழகு

அது + அன் = அதன்

அது + ஐ = அதை

உயிரீற்றஃறிணைப்பெயர்கள் க, ச, த, ப களுடன் கூடுகையில் இருவழியிலும் பிந்தியவையிரட்டிக்கின்றன. ஆயினும் ஒரோவழி அவைகள் சிலவினைச்சொற்களையும் அஃறிணைப் பெயர்களையும் புணருகையில் அப்படியிரட்டிக்கமாட்டா.

வேற்றுமை

பலா + காய் = பலாக்காய்
சினை = பலாச்சினை
தோட்டம் = பலாத்தோட்டம்
பழம் = பலாப்பழம்
தாரா + கை = தாராக்கை
செவி = தாராச்செவி
தலை = தாராத்தலை
புறம் = தாராப்புறம்

அல்வழி

பலா + குறிது = பலாக்குறிது
பலா + சிறிது = பலாச்சிறிது
பலா + தீது = பலாத்தீது
பலா + பெரிது = பலாப்பெரிது

வேற்றுமை

விள + கோடு = விளக்கோடு
கடு + காய் = கடுக்காய்

அல்வழி

வட்ட + கல் = வட்டக்கல்
தாழ் + கோல் = தாழ்க்கோல்
தேடி + சென்றான் = தேடிச்சென்றான்
தேடா + போனான் = தேடாப்போனான்
தேடு + போனான் = தேடுப்பொனான்
தேடென + போனான் = தேடெனப்போனான்
தேட + போனான் = தேடப்போனான்
உண்பாக்கு + போனான் = உண்பாக்குப்போனான்
மாம்பூத்து + காய்த்தது = மாம்பூத்துக்காய்த்தது
பறவை பொள்ளென + பறந்தது = பறவைபொள்ளெனப்பறந்தது
அது சால + பகைத்தது = அதுசாலப்பகைத்தது

When the words ending in முற்றுகரம் or perfect write with the words beginning with the vowels the உ. goes away leaving its body or mute consonant as in the following examples;

The door is beautiful.

Its.

It. — (Vide Soo.14)

When Neuter Gender substantives ending in vowel unite in both ways with hard letters க, ச, த, ப, the latter are doubled but on some occasions: they do not do so when they join some verbs and neuter nouns.

As. INCASES.

Jack fruit unripe.
Jack fruit branch.
Jack fruit garden.
Jack fruit.
A bird's hand.
A bird's ear.
A bird's head.
A bird's back.

IN NO CASES

The Jack tree is short.
The Jack tree is small.
The Jack tree is bad.
The Jack tree is great.

IN CASES

Velan tree's branch.
Nut.

IN NO CASES

Round stone.
A little stick.
He went in search.
He went to eat.
The tree put forth flower and afterwards fruits.
The bird flew vehemently.
It hated greatly.

அதை யிருளின்றி + கண்டான்

= அதை யிருளின்றிக் கண்டான்

மற்றை + கமலம் = மற்றைக்கமலம்

மற்றை + சாதி = மற்றைச்சாதி

கடி + கமலம் = கடிக்கமலம்

சொன்றி + குழிசி = சொன்றிக்குழிசி

கங்கை + சடை = கங்கைச்சடை என மிகுந்தன

வேற்றுமை

ஏரி + கரை = ஏரிகரை

குழவி + கை = குழவிகை

குழந்தை + தலை = குழந்தைதலை

மலை + கிழவோன் = மலைகிழவோன்

அல்வழி

கூப்பு + கரம் = கூப்புகரம்

கூட்டு + தனம் = கூட்டுதனம்

நாட்டு + புகழ் = நாட்டுபுகழ்

என இயல்பாயின

சிலவுயிரீற்றையுடைய மரப்பெயர்கள் க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்களுடன் புணருகையில் அவற்றின் இடையில் ங, ஞ, ந என்னும் மெல்லெழுத்துக்கள் தோன்றுகின்றன. உம்.

விள + காய் = விளங்காய்

களா + கனி = களாங்கனி

மா + கொம்பு= மாங்கொம்பு

மா + செதிள் = மாஞ்செதிள்

மா + தோல் = மாந்தோல்

இரண்டாம் அதிகாரம்

அடியிற்றொடர்ந்துவருகிற உயிரீற்றுச்சொற்கள் மற்றச் சொற்களுடன் புணருவதில் கவனித்திராநின்ற உருக்களைக் குறித்துணர்த்துகின்றது.

பொதுவிதி

அகரவீற்றையுடைய செய்யியவென்னும் எதிர்கால வினையெச்சம், பெயர்வினை விடையுரியென்னும் நான்கு சொல்லடியாகப் பிறந்த தெரிநிலைவினைப்பெயரெச்சம், பெயர் இடை உரி அடியாகப் பிறந்த பெயரெச்சக் குறிப்பு, அஃறிணைப்பன்மை வினைமுற்று, அம்ம என்னுமிடைச்சொல் இவைகள் க, ச, ட, த, ப, ற என்னும் வல்லெழுத்துக்களுடன் புணருகையில் விகாரப்படாமல் இயல்பாகும்.

செய்யியவென்னும் வினையெச்சப்புணர்ச்சி

உண்ணிய + கண்டான்

சென்றான்

தந்தான்

புகன்றான்

He saw it clearly.
The other Tamarai flower.
The other caste.
Fragrant camalam flower.
Rice pot.
The lock of hair with Ganges.

IN CASES

The bank of a tank.
The child's hand.
The child's head.
The man possessed of a hill.

WITHOUT CASES

Closing hands.
Amassing riches.
The praise which can be made firm. (Vide Soo.1٩,

When the some names of tress ending in vowels unite with hard letters f, r, j, j, g, ÷, P, e, are introduced between the letters united, as,

The valam Fruit unripe
The fruit.
The branch of a mango tree.
The bark of mango tree.
The skin of mango tree. - (Vide Soo.16)

CHAPTER II

On the forms observed in connecting words ending in vowels with other words which follow them.

GENERAL RULE

When the verbal participles, adjectives derived from nouns பெயரெச்சம், Paticiples which partake the nature of relative pronouns, adverbs of comparison, adjectives nouns or pronouns containing the acts of verbs, or participal nouns, the conjugated verbs of the Neuter Gender and the plural number, the particle with which the sixth case (Genitive) is formed, Nouns or Neuter Gender and plural number, and the word அம்ம, which end in அ, unite with hard letters க, ச, ட, த, ப, ற: the connection does not meet with any variation, as.

He saw eating.
He saw going.
He saw giving.
He saw saying.

பெயரடியாகப் பிறந்த பெயரெச்சப்புணர்ச்சி

கறுத்த + குதிரை
சிங்கம்.
தகர்.
பன்னி.
வெளுத்த + குதிரை முதலாயின.

வினையடியாகப் பிறந்த பெயரெச்சப்புணர்ச்சி

உண்ட + குதிரை முதலாயின
உண்ணாநின்ற + குதிரை முதலாயின
உண்ணாத + குதிரை முதலாயின

இடைச்சொல்லடியாகப்பிறந்த பெயரெச்சப் புணர்ச்சி

பொன்போன்ற + குதிரை முதலாயின
திண்ணென்ற + குதிரை முதலாயின.

உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சப் புணர்ச்சி

சான்ற + குதிரை முதலாயின
உற்ற + குதிரை முதலிய

பெயரடியாகப் பிறந்த பெயரெச்சக் குறிப்புப்புணர்ச்சி

அமர்முகத்த + குதிரை முதலிய
கடுங்கண்ண + குதிரை முதலிய
சிறிய + குதிரை முதலிய
பெரிய + குதிரை முதலிய
உள + குதிரை முதலிய
இள + குதிரை முதலிய
பல + குதிரை முதலிய
சில + குதிரை முதலிய

அஃறிணைப்பன்மை வினைமுற்றுப் புணர்ச்சி.

பறவைகள் நடந்த கொற்றா.
சாத்தா.
தேவா.
பூதா.
பறவைகள் நடக்கின்ற கொற்றா, சாத்தா, தெவா, பூதா.
பறவைகள் நடப்பகொற்றா, சாத்தா, தெவா, பூதா.

ஆறனுருபுப் புணர்ச்சி

தன + கைகள்.
செவிகள்.
தலைகள்.
பதங்கள்.

அஃறிணைப் பன்மைப்பெயர்ப்புணர்ச்சி

பல + கொடுத்தான்
பல + செய்தான்.
பல + தின்றான்.
பல + பிடித்தான்.

இவ்வசனங்களில் ஐ யென்னும் இரண்டாம் வேற்றுமையுருபு தொக்கியிருக்கின்றது.

A black horse.
A black lion.
A black sheep.
A black hog.
A white horse &c.
The horse which ate &c.
The horse which is eating &c.
The horse which has not eaten &c.
A horse like gold &c.
A horse comparatively stout &c.
A best horse &c.
An agreeable horse &c.
A horse having warlike nature &c.
A horse having cruel sight &c.
A horse having the youth &c.
You Kottah birds walked.
You Sattah birds walked.
You Dava birds walked.
You Pooda birds walked.

You Kottah Sattah Dava and Pooda birds are walking.

You Kottah &c. birds will walk.

His hands.
His cars.
His hands.
His feet.
He gave different things.
He did different things.
He ate different things.
He caught different things.

These are phrases in which the case I is understood.

வேற்றுமைகளைப் பெறாத வசனங்கள் அல்லது அல்வழிச்சந்தியில் வழங்குபவைகள்.

பல + குதிரை.
சிங்கம்.
தகர்.
பன்றி.

அம்ம + கொற்றா.
சாத்தா.
தேவா.
பூதா.

விதி 1.:– வாழியவென்னும் வியங்கோள்முற்றினீற்று (ய) என்னுமுயிர் மெய் க, ச, த, ப என்னும் வலிமுன்செய்கை விகாரம் செய்யுள் விகாரங்களாலன்றி யியல்பாகவே கெட்டுநிற்கும். இவ்வாறு ஈற்றெழுத்தாகிய (ய) கெட்டு வாழியென நின்ற வழியும் வல்லெழுத்தின் முன்னியல்பாகும்.

உதாரணம்.

வாழிய கிளியே.
வாழி சிங்கமே.
தேரே.
பெண்ணே.

விதி – 2.:– வினையொழுங்கில் நிற்கிற சாவ என்னும் இடைசொல் இலக்கணவிதிப்படி (வ) ஈற்றை யொழிக்கப்பட்ட போதும் க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்களுடன் கிரமப்படிக்கேபுணரும். **உ–ம்.**:–

அவனைச் சாவக்குத்தினான் = சாக்குத்தினான்.

விதி – 3.:– பலவென்னுமிச்சொல் மற்றொரு பலவென்னுஞ்சொல்லுடன் புணருகையில் இயல்பாயேனும் விகாரமாயேனும் அடியில் வருகிறபடி வடிவத்தைப்பெறும். உ–ம்.:–பல + பல = பலபல இஃதியல்பு.

பல + பல = பலப்பல இஃது விகாரம் ஏனெனில் மற்றொரு பகா வொற்றை யிடையிற் பெற்றுப்புணர்ந்தது.

சிலவேளைகளில் பலவென்னுமொழி மற்றொரு பலவுடன் சேருகையில் உயிர்மெய்யாகிய லகரத்தின் மேலேறியிருக்கிற அகரவுயிரையொழித்து மெய்யெழுத்தாகிய ல் எழுத்தைமாத்திரம் பெறுகின்றது. **உ–ம்.**:–பல + பல = பல்பல.

இப்படிப்பட்ட புணர்ச்சியில் மெய்யெழுத்தாகிய ல் சிலவெளைகளில் ற கரமாய்த்திரிகின்றது. **உ–ம்.**:–பல + பல = பற்பல

பல என்னுமொழி மற்றமொழிகளுடன் புணருகையில் அது முதலிற் காட்டிய இருவகையான வடிவத்தைப் பெறுகின்றது. உ–ம்.:–

பல + கலை = பல்கலை
படை = பல்படை
மணி = பல்மணி
நாள் = பல்நாள்
யானை = பல்யானை
வளை = பல்வளை முதலியன.

அல்வழி or phrases which admit of no cases.
Different horses.
Different lions.
Different sheep.
Different hogs.
Hear Kottah, Sattah, Dava and Pooda. — (Vide Soo.17. of உயிர்ற்றுப்புணரியல் in Nannool.

RULE - I

When the conjugated verb வாழிய, which is of optative kind, ends which and m ய, has a regular connection with hard letters க, ச, த, ப, it has a regular connection even when the last letter a is omitted.

AS:

Parrot, live thou happily.
Lion, live thou happily.
Cart, live thou happily.
Woman live thou happily. —— (Vide Soo.18).

RULE - II

The participle சால in the conjugated from has a regular connection with the hard letters f, r, j and g, both when the letter ல remains and when it is grammatically omitted, as.

He gave him in mortal stab or he stabbed him to death. — (Vide Soo.19.)

RULE - III

The word பல when it connects with same word it has both regular and irregular form of connections as follows:

This is regular connection.

This is irregular connection, because an additional ப is produced by the connection.

Sometimes the word பல loses its termination of the vowel அ which the consonant bore and retains the consonant ல் alone as a mute one in connecting with the same word பல.

In such connection the mate consonant ல் is sometimes changed into ற as:

When the word பல unites with other words, it has the first mentioned two forms of connection, as:

(See opposite page)

மேலே விவரித்த நான்குவிதிகளும் சில என்னுஞ்சொல் தன்னைப் போலொத்த மொழியோடும் வேறு வகையான மொழிகளோடும் புணருவதற்கும் உபயோகப்படுகின்றன.

விதி –4

ஒரெழுத்தாலாகிய ஆ மா என்னுஞ் சொற்களும் அதுபோல் இரண்டெழுத்துக்களாலாகிய மியாவென்னுஞ் சொல்லும் அஃறிணைப்பன்மை யெதிர்மறை வினைமுற்றும் க, ச, த, ப என்னும் வல்லினங்களுடன் கூடுகையில் அல்வழியில் இயல்பாம். **உ–ம்.:–**

ஆ + குறிது = ஆகுறிது.
ஆ + சிறிது = ஆசிறிது
ஆ + தீது = ஆதீது
ஆ + பெரிது = ஆபெரிது
மா + குறிது = மாகுறிது
மா + சிறிது = மாசிறிது
மா + தீது = மாதீது
மா + பெரிது = மாபெரிது
கேண்மியா + கொத்தா.
சென்மியா + சாத்தா.
கொண்மியா + தேவா.
உண்மியா + பூதா.
உண்ணா + குதிரைகள்.
செந்நாய்கள்.
தகர்கள்.
பன்றிகள்.

விதி– 5

தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்துவருகிற ல் என்னும் மெய்யெழுத்தை யூர்ந்த ஆ என்னும் நெட்டுயிர் இயல்பான தன்னுடைய வரிவடிவைப் பெற்றும் சிலவேளைகளிற் பெறாமலுமாம். அதாவது அது சிலவிடங்களில் விகாரப்படாதிருக்கின்றது. சிலவிடங்களில் குறுகுகின்றது. சில தருணங்களில் அவ்வாறு குறுகின நிலைமையுடன் ஒரு உகரத்தையும் தழுவுகின்றது எனலாம். **உ–ம்.:–**

நிலா + உதித்தது = நிலவுதித்தது.
நிலா + விரிகானல் = நிலவிரிகானல்
கனா + கண்டேன் = கனாவுகண்டேன்.
இரா + வந்தது = இரவு வந்தது.

விதி– 6

1. அளவைப்பெயராகிய நாழி என்னும் பெயர் அவ்வாறான உரியென்னும் ஒரு பெயருடன் சந்திக்கையில் (ழி) என்னும் மெய் கெட்டு வருமொழியாகிய உரியென்னுஞ்சொல்லின் முதலி லிருக்கிற உயிரெழுத்து (வு) என்னும் மெய்யெழுத்தாகின்றது. சிலவிடங்களில் அடியில் வருமுதாரணப்படிக்கு நிலைமொழி யீற்றிலிருக்கிற ழிக்குப்பதிலாக (டகர) மெய்தோன்றுகின்றது. அப்பொது வருமொழி, முதலினின்ற உ அதன் மேலேறுகின்றது.

The foregoing four rules are applicable to the word சில also when it connects with a like word and with other words.-(Vide See.20)

RULE - IV

When the words formed by a single letter ஆ, மா as well as the word மியா which is formed by two letters, and the verbs in the conjugated negative form in the Neuter Gender 3 rd person plural connect with the hard letters க, ச, த, ப there occurs no variation, and this regular connection takes place as when the above words admit of no cases, as.

The cow is short.
The cow is young.
The cow is bad.
The cow is great.
The wild cow is short, young, bad and great.
Hear thou Kottah.
Go thou Sattah.
Buy thou Thevah.
Eat thou Poothah.
Not eating horses.
" dogs.
" sheep.
" hogs – (Vide Soo.21)

RULE - V

The long vowel ஆ in the consonant வ following single short letters does and sometimes does not lose its natural state; that is to any, in some places it stands without variation. In some it becomes short, and on some occasions with that shortened state it takes the letter உ as:

The moon rose.
A grove in which the moon slunes.
I saw a dream.
The night came on –(Vide See.22)

RULE - VI

1. When the noun of measure, namely நாழி with a noun of the same kind, viz. உரி the consonant goes way, and the vowel in the beginning of the next word உரி becomes a consonant வு. In some cases the consonant comes in the room of ழி and then the next vowel உ is joined to it as in the following examples.

நாழி + உரி = நாவுரி

நாழி + உரி = நாடுரி

உ, உரி யென்னுஞ்சொல் உயிர், வல்லினம், மெல்லினம் இடையினம் என்னும் நாற்கணங்களையு முதலாகவுடைய சொற்களுடன் கூடுகையில் அவைகட்குமத்தியில் (ய) என்னும் மெய் உபயோகிக்கப்படுகின்றது. **உம்.**

உரி + உப்பு = உரியவுப்பு

உரி + பயரு = உரியபயரு

உரி + மிளகு = உரிமிளகு

உரி + வாகு = உரியவாகு

விதி– 7

புளி என்னுஞ்சொல் க, ச, த, ப என்னும் வல்லினத்துடன் புணருகையில் அவற்றிற்கினமாகிய மெல்லொற்றுக்கள் முறைப்படி இருமொழிக்குமிடையில் தோன்றுகின்றன. **உம்.**

புளி + கறி = புளிங்கறி

புளி + சோறு = புளிஞ்சோறு

புளி + தயிர் = புளிந்தயிர்

புளி + பாளிதம் = புளிம்பாளிதம்.

விதி– 8

1. இகர வீற்றையுடைய சில அஃறிணைப்பெயர்கள் க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்களுடன் புணருகையில் அல்வழிக்கண் இயல்பாகின்றன. உம்.

பருத்தி + குறிது
சிறிது.
தீது.
பெரிது.

ஒதி + குறிது முதலிய.

2. சில இகரவீற்றையுடைய பெயர்கள் சிறப்புப் பெயர்களைச் சந்திக்கையில் அவைகளுக்கு இடையே ஆகாரச்சாரியை தோன்றும். உம்.

தெய்வசிகாமணி + பிள்ளை = தெய்வசிகாமணியாப்பிள்ளை

வீராசாமி + பிள்ளை = வீராசாமியாப்பிள்ளை.

விதி– 9

ஆப்பீ என்னுமொழி நாற்புணங்களுடன் சேருகையில் நிலைமொழியீற்றினின்ற பீ இருவகைக்கண்ணுங் குறுகுகின்றது. **உம்.**

வேற்றுமை

ஆப்பீ + அருமை = ஆப்பியருமை.

ஆப்பீ + குளிர்ச்சி = ஆப்பிகுளிர்ச்சி

ஆப்பீ + நன்மை = ஆப்பிநன்மை

ஆப்பீ + வன்மை = ஆப்பிவன்மை

அல்வழி

ஆப்பீ + அரிது = ஆப்பியரிது

ஆப்பீ + குளிரும் = ஆப்பிகுளிரும்

ஆப்பீ + நன்று = ஆப்பி நன்று

ஆப்பீ + வலிது = ஆப்பிவலிது

2. When the said word உரி is joined with the words beginning with vowels and consonants of the three kinds, viz. the hard, soft, and middle consonant, is introduced between them, as - (Vide Soo. 24)

A quarter measure of salt.
"
" of pepper.
"

RULE - VII

When the noun புளி unites with the hard letters க ச த and ப the soft letters relative to them respectively appear between the words connected, as – (Vide Soo. 25)

(See opposite page.)

RULE - VIII

Some nouns of Neuter Gender ending in vowel இ have a regular connection with hard letters க ச த and if they are without cases, as:

Cotton tree is short, young, bad, and great.

Odee a tree repeat-(Vide See.26)

When some proper nouns which end in unite with the name of titles, the connection produces between them the particle, as-

RULE - IX

When the word ஆப்பி or Cow-dung, connects with vowels and consonants of three kinds, the long பீ is shortened in sentences with or without cases.

IN CASES

The scarcity of Cow-dung.
The coldness of do.
Goodness of Cow-dung.
Hardness of Cow-dung.

NO CASES

The Cow-dung is seldom to be had.
" will grow cold.
" is good.
" is hard.-(Vide Soo.27)

விதி –10

ம் என்னுஞ்சொல் க, ச, த, ப என்னும் வல்லினங்களைக் கூடுகிறபோது சிலவிடங்களில் அவைகள் இயல்புச் சந்தியைப் பெறுகின்றன. சிலவிடங்களில் வல்லினமிரட்டித்துச் சந்திக்கின்றது. மற்றும் சிலவிடங்களில் அப்புணர்ச்சி மேலேகாட்டிய வல்லினங்களுக்கினமாகிய மெல்லொற்றுக்களை அவைகளுக் கிடையில் தோன்றச்செய்கின்றது. இவையெல்லாம் வேற்றுமையைப் பெறாத புணர்ச்சியிலுண்டாகின்றன. அவையாவன.

மீ + கண் = மீ கண்
கூற்று = மீக்கூற்று
கோள் = மீக்கோள்
தோல் = மீந்தோல்

விதி– 11

குற்றுகரவீற்றையுடைய சொற்கள் வல்லினங்களைச் சந்திக்கையில் இயல்பாம். உ–ம்.:–

அடு + களிறு = அடுகளிறு.
அடு + சேனை = அடுசேனை
அடு + தகர் = அடுதகர்
அடு + பன்றி = அடுபன்றி
ஒரு + கை = ஒருகை
ஒரு + செவி = ஒரு செவி
ஒரு + தலை = ஒருதலை
ஒரு + புறம் = ஒருபுறம்
இரு + கை = இருகை
இரு + செவி = இரு செவி
இரு + தலை = இருதலை
இரு + புறம் = இருபுறம்
அறு + கை = அறுகை = அறுசெவி முதலாயின
எழு + கை = எழுகை முதலாயின.

வேற்றுமை:–

அது + கொண்டான்
அது + சொன்னான்
அது + தந்தான்
அது + படைத்தான்
உது + கொண்டான்
உது + சென்றான்
உது + தந்தான்
உது + படைத்தான்

அல்வழி:–

அது + குறிது
அது + சிறிது
அது + தீது
அது + பெரிது

இது, உது + குறிது, சிறிது, தீது, பெரிது

RULE X

When the word பீ joins the hard letters க, ச, த, ப they have a regular connection in some places; on some occasions the connection renders the hard letters doubled; on some other occasions, the union produces between them soft letters peculiar to each of the above hard letters. All these occur in the composition which admit of no cases, namely:

Upon the eye.
Praise.
Covering sheet.
The skin.- (Vide See.28)

RULE - XI

When the words which have in their terminations the short letter உ connect with the hard letters, no variation results, as:

Fighting Elephant.
" army.
" sheep.
" hog.
One hand.
One ear.
One head.
One back.
Two hands.
Two ears.
Two heads.
Two backs.
Six hands, &c.
Seven hands, &c.

WITH CASES

He bought it.
He said it.
He gave it.
He created it.
He bought this.
He said this.
He gave this.
He created this.

WITHOUT CASES

That is short.
do. young.
do. bad.
do. great.
This is short.
This is young.
do. bad.
do. great.-(Vide See.29)

விதி– 12

அது என்னுஞ் சுட்டுப்பெயர் அன்று என்னுஞ்சொல்லுடன் கூடுகிறபோது அகரம் வகரமாகின்றது. சிலவிடங்களில் குற்றுயிர் ஆகிய உகரத்தின் ஒலியைக்கொண்டிருக்கிற தகரமானது அவ்வுயிரை யிழந்து தா என நீளுகின்றது. அப்போது வருமொழி முதலினிற்கும் அகர முமறைந்து போகின்றனது. **உம்.**

அது + அன்று = அதுவன்று அதான்று.

விதி– 13

1. நெடில் ஆய்தம் உயிர்; இடையினம் இவைகளைத் தொடர்ந்துவருகிற வல்லினத்தை யூர்ந்த உகரம் வல்லின மொழிகளுடன் புணருகையில் விகாரப்படாது.

இவ்விதி வேற்றுமை அல்வழி எனுமிரண்டு சந்திக்கு முபயோகப் படத்தக்கது.

வேற்றுமை

நாகு + கடுமை
சிறுமை
தீமை
பெருமை

எஃகு + கடுமை
சிறுமை
தீமை
பெருமை

உலகு + கடுமை
சிறுமை
தீமை
பெருமை

சால்பு + கடுமை
சிறுமை
தீமை
பெருமை

அல்வழி

நாகு + கடிது
சிறுமை
தீமை
பெரிது

எஃகு + கடிது முதலாயின
உலகு + கடிது முதலாயின
சால்பு + கடிது முதலாயின

2. அன்றியும் மேலே சொல்லிய மெய்யெழுத்துக்களை யூர்ந்திருக்கிற உ மெல்லொற்றைத் தொடருகிற போது வல்லெழுத்துக்களுடன் இயல்புச் சந்தியைப் பெறுகின்றது. இவ்வித உகரத்தையுடைய சொற்கள் வேற்றுமையைப் பெறாவிடத்தில் மாத்திரமுபயொகப்படுகின்றது. **உம்.**

குரங்கு + கடிது
சிறுமை
தீமை
பெரிது

RULE XII

When the pronoun அது joins the word (not), the word is changed into வ. In some cases the consonant த which bears the pronunciation of the short vowel உ loses it and becomes long தா when the vowel at the next word also disappears, as-(Vide See.30)

RULE XIII

When the vowel உ it its bodies of hard consonants is next to the long consonants the letter ஆய்தம் (ஃ) all vowels and middle lettersï is not varied in uniting with words beginning with hard letters.This rule is applicable to phrases with or without cases.

PHRASES WITH CASES

Chank's hardness
do. smallness.
do. badness
do. greatness or value.
Javelin's hardness.
do. smallness.
do. badness.
do. value.
World's hardness.
do. narrowness.
do. badness.
do. value.
Learning's hardness.
do. narrowness.
do. badness.
do. value.

WITHOUT CASES

The chank is hard.
do. small.
do. bad.
do. great.
The javelin is hard &c.
The world is hard &c.
The learning is hard &c.

2. But when the letter உ in its aforesaid bodies follows the soft consonants has an unvaried connection with hard letters. This rule is applicable only when the words which have the said உ do not admit of cases, as- Note The word சால்பு has various meanings.

The monkey is hard.
do. small
do. bad.
do. great.-(Vide Soo.

3. தனித்து நிற்கிற நெட்டெழுத்துடன் அல்லது குற்றெழுத்துடன் அடுத்து வருகிற உயிர்மெய்க்குறில்களாகிய (டு, று) கள் நாற்கணங்களுடனுங் கூடுகையிலிரட்டிக்கப்படுகின்றன.

இது வேற்றுமைச்சந்தியில் வழங்குகின்றது. உ–ம்.:–

ஆடு + அடி = ஆட்டடி
ஆடு + கால் = ஆட்டுக்கால்
ஆடு + செவி = ஆட்டுச்செவி
ஆடு + தலை = ஆட்டுத்தலை
ஆடு + புறம் = ஆட்டுப்புறம்
ஆடு + நிறம் = ஆட்டுநிறம்
ஆடு + மயிர் = ஆட்டுமயிர்
ஆடு + வன்மை = ஆட்டுவன்மை
முருடு + அடி = முருட்டடி
முருடு + பக்கம் = முருட்டுப்பக்கம்
முருடு + நலம் = முருட்டுநலம்
முருடு + வன்மை = முருட்டுவன்மை
களிறு + அடி = களிற்றடி
களிறு + கால் = களிற்றுக்கால்
களிறு + நிறம் = களிற்றுநிறம்
களிறு + வன்மை = களிற்றுவன்மை

விதி 14

மென்றொடர்மொழிக்குற்றியலுகரங்கள் நாற்கணங்களுடன் கூடுகையில் அம்மெல்லெழுத்துக்கள் தமக்கினமான வல்– லெழுத்துக்களைப் பெற்று முடிகின்றன மற்றும் சிலவிடங்களில் அந்த உகரம் ஐகாரமாகத் திரியப்படுகின்றது. உ–ம்.:–

கன்று + ஆ = கற்றா
மருந்து + பை = மருந்துப்பை.
சுரும்பு + நாண் = சுருப்புநாண்
கரும்பு + வில் = கருப்புவில்
இன்று + நாள் = இற்றைநாள்
பண்டு + காலம் = பண்டைக்காலம்
பண்டு + ஓர் = பண்டையோர்
பண்டு + ஐ = பண்டை
ஒன்று + ஐ = ஒற்றை
இரண்டு + ஐ = இரட்டை
ஈராண்டு + ஐ = ஈராட்டை
மூவாண்டு + ஐ = மூவாட்டை

விதி 15

1. திசையைக்காட்டுகிற சொல் மற்றொருதிசையைக் காட்டுகிற சொல்லோடாவது வேறுசொற்களோடாவது சேருகையில் விகாரப்படாது.

3. The short consonants டு and று should they be next to the long letters which may stand singly or short letter are doubled when they unite with vowels and three sorts of consonants.This takes place in the compositions containing cases, as:

The sheep's feet.
do. legs.
do. ears.
do. head.
do. back.
do. colour.
do. hair.
do. hardness.

A musical instrument's feet.
do. side.
do. goodness.
do. hardness.

A elephant's feet
do. legs
do. colour
do. hardness.- (Vide Soo. 31, 32 & 33)

RULE - XIV

The short உ following the soft consonants in connecting with vowels and consonants of three kinds, renders its preceding soft letters to be such hard letters as are peculiar to suply their places respectively. In some instances the உ is changed into ஐ, as:

A cow having a calf
Medicine bag
A rope made of sugar cane
A bow made of sugar cane
This day
Former days
Former people
Former
One
Two
Two years
Three years (Vide Soo. 34 & 35.)

RULE XV

1. When the word denoting a direction unites with other direction and with words of other kind the connection produces no variation, as:

உ—ம்.:—

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு.

வடக்கு + மலை – வடக்குமலை.

வடக்கு + வீதி – வடக்குவீதி

கிழக்கு + வீடு – கிழக்குவீடு

குணக்கு + வீடு – குணக்குவீடு

மேற்கு + மலை – மேற்குமலை

குடக்கு + மலை – குடக்குமலை

தெற்கு + வயல் – தெற்குவயல்

2. வடக்கு, கிழக்கு அல்லது குணக்கு குடக்கு எனத்திக்குகளைக் காட்டுகிற மூன்று சொற்களும் சிலவிடங்களில் அவைகளின் விகுதிகளாகிய க்கு என்பவைகளையிழக்கின்றன. **உம்.**

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு

மேற்கு = வடமேற்கு

திசை = வடதிசை

மலை = வடமலை

வேங்கடம் = வடவேங்கடம்

கிழக்கு + மேற்கு = கிழமேற்கு

குணக்கு + திசை = குணதிசை

குணக்கு + பால் = குணபால்

குணக்கு + வரை= குணவரை

குடக்கு + திசை = குடதிசை

குடக்கு + பால் = குடபால்

குடக்கு + வரை = குடவரை

3. மேற்கு, தெற்கு என்னுமொழிகள் சிலவிஷயங்களில் கு என்னுங் குற்றெழுத்தை யிழக்கின்றன. அடுத்துநிற்கிற றகரம் லகரமாயாவது னகரமாயாவது திரிகின்றது. உம்.

தெற்கு + வடக்கு = தென்வடக்கு

தெற்கு + மலை = தென்மலை

தெற்கு + குமரி = தென்குமரி

தெற்கு + வீதி = தென்வீதி

மேற்கு + பால் = மேல்பால்

மேற்கு + நாடு = மேல்நாடு

விதி 16

தெங்கு என்னும் மரப்பெயர் காய் என்னுஞ்சொல்லைச் சந்திக்கையில் ஈற்றிலிருக்கிற உகரத்தை மெய்யைவிட்டிழந்து அந்த சந்தியை நிறைக்க அதனுடைய கடைசியில் அம் என்னுஞ் சாரியைச் சொல்லைக்கொள்ளுகின்றது.

உ—ம்.:—

தெங்கு + காய் = தெங்கங்காய்

சிலவிடங்களில் அது காய் என்பதுடன் சந்திக்கையில்குகரத்தையிழந்து அதனுடைய முதலெழுத்து நீளுதலைப்பெறுகின்றது. உம்.

தேங்கு + காய் = தேங்காய்

East, west, south and north.
The north hill.
do. street.
East house, &c.
The west hill.
The south field.

2. Three of the words signifying directions namely, வடக்கு, கிழக்கு அல்லது குணக்கு and குடக்கு lose their terminations க் and கு in some places, as:

North east.
North west.
North.
North hill.
North vengadem.
East west.
East.
East side.
East hill.
West.
West side.
West hill.

3. The words மேற்கு and தெற்கு lose in some cases the last short letter கு and the preceding letter ற் is changed into either ல் or ன் as:

South north.
South hill.
South river.
South street.
West side.
West country.-(Vide Soo.36)

RULE - XVI

When the noun denoting a tree, namely தெங்கு unites with the word காய் (fruit) it loses the last vowel உ exempting its body, and gets a particle அம் at its end =to under the connection consistent, as:

The fruit of a Coconut tree.

In some places it loses the letter கு and has its first letter lengthened when it unites with the word காய் as-

(Vide Soo.37.)

விதி 17

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என்னும் எண்ணுப்பெயர்கள் வேறே எண்ணுப்பெயர்களோடும் அளவைப்பெயரொடும் பிறபெயரோடும் சேருகையில் அச்சந்திப்புசிலவிடங்களில் விகாரப்படாமலாகின்றது. மற்றவிடங்களில் நிலைமொழி வருமொழிகள் அநேகம் வேறுபாட்டைப் பெற்று அடியில் வருகிற உதாரணப்படிக்குத் திரிகின்றன. அவையாவன:

மூன்று + நான்கு = மூன்றுநான்கு
கழஞ்சு = மூன்றுகழஞ்சு
நான்கு + படி = நான்குபடி
ஐந்து + கடல் = ஐந்துகடல்
ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
பத்து = ஒருபது
களஞ்சு = ஒரு களஞ்சு
நாழி = ஒரு நாழி
வகை = ஒரு வகை
இரண்டு + ஆயிரம் = ஓராயிரம்
பத்து = இருபது
கழஞ்சு = இருகழஞ்சு
நாழி = இருநாழி
வகை = இருவகை
மூன்று + ஒன்று = மூவொன்று
எடை = மூவெடை
உழக்கு = மூவுழக்கு
பத்து = முப்பத்து
கழஞ்சு = முக்கழஞ்சு
நாழி = முந்நாழி
மொழி = மும்மொழி
நான்கு + ஒன்று = நாலொன்று
எடை = நாலெடை
நாழி = நானாழி
மணி = நான்மணி
பத்து = நாற்பது
கழஞ்சு = நாற்கழஞ்சு
கலம் = நாற்கலம்
கவி = நாற்கவி
ஐந்து + மூன்று = ஐம்மூன்று
மஞ்சாடி = ஐம்மஞ்சாடி
வட்டி = ஐவ்வட்டி
பத்து = ஐம்பது

RULE XVII

When the cardinal adjectives, or nouns denoting numbers, as the Tamil Grammarian calls them, namely ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு connect with nouns denoting like numbers with substantives signifying weights, measures and with words of other kind, the union takes place without variation in some places. In other places, the words which connect with each other undergo different variations and changes, as in the following instances: viz.

(Vide Soo. from 38 to 49)

கழஞ்சு = ஐங்கழஞ்சு
பொறி = ஐம்பொறி
எடை = ஐயெடை
ஆழாக்கு = ஐயாழாக்கு
அம்பு = ஐயம்பு

ஆறு + பத்து = அறுபது
நாழி = அறுநாழி
கழஞ்சு = அறுகழஞ்சு
மீன் = அறுமீன்

எழு + பத்து = எழுபது
கழஞ்சு = எழுகழஞ்சு
நாழி = எழுநாழி
மீன் = எழுமீன்
கடல் = எழுகடல் அல்லது ஏழ்கடல்

எட்டு + பத்து = எண்பது
கழஞ்சு = எண்கழஞ்சு
கலம் = எண்கலம்
குணம் = எண்குணம்

ஒன்பது + பத்து = தொண்ணூறு
நூறு = தொள்ளாயிரம்

ஒன்று + பத்து = ஒருபது அல்லத ஒருபஃது
இரண்டு + பத்து = இருபது அல்லது இருபஃது
மூன்று + பத்து = முப்பது அல்லது முப்பஃது
நான்கு + பத்து = நாற்பது அல்லது நாற்பஃது
ஐந்து + பத்து = ஐம்பது அல்லது ஐம்பஃது
ஆறு + பத்து = அறுபது அல்லது அறுபஃது
ஏழு + பத்து = எழுபது அல்லது எழுபஃது
எட்டு + பத்து = எண்பது அல்லது எண்பஃது
பத்து + இரண்டு = பன்னிரண்டு

ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம்
கழஞ்சு = ஒன்பதின் கழஞ்
கலம் = ஒன்பதின் கலம்
மடங்கு = ஒன்பதின் மடங்கு
ஒன்று = ஒன்பதிற்றொன்று
இரண்டு = ஒன்பதிற்றிரண்டு
குறுணி = ஒப்திற்றுக்குறுணி

பத்து	+	ஒன்று = பதினொன்று
		மூன்று = பதின்மூன்று
		ஆயிரம் = பதினாயிரம்
		கழஞ்சு = பதின்கழஞ்சு
		கலன் = பதின்கலன்
		மடங்கு = பதின்மடங்கு
		ஒன்று = பதிற்றொன்று
		பத்து = பதிற்றுப்பத்து
		தூணி = பதிற்றுத்தூணி
ஒன்று	+	ஒன்று = ஒவ்வொன்று
இரண்டு	+	இரண்டு = இவ்விரண்டு
மூன்று	+	மூன்று = மும்மூன்று
நான்கு	+	நான்கு = நன்னான்கு
ஐந்து	+	ஐந்து = ஐவ்வைந்து
ஆறு	+	ஆறு = அவ்வாறு
ஏழு	+	ஏழு = எவ்வெழு
எட்டு	+	எட்டு = எவ்வெட்டு
பத்து	+	பத்து = பப்பத்து

விதி 18

பூ என்னும் சொல் க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்களுடன் சந்திக்கிற பொது இப்புணர்ச்சி ஒவ்வொரு வல்லெழுத்துக்குமுரிய மெல்லெழுத்தைக் கொண்டுவருகின்றது.

உ–ம்.:–

பூ + கொடி = பூங்கொடி
சோலை = பூஞ் சோலை
தடம் = பூந்தடம்
பனை = பூம்பனை

விதி 19

எ, ஒ என்னும் இடைச்சொற்கள் வல்லெழுத்துக்களுடன் கூடுகையில் இச்சந்தி பொதுவிதிப்படி விகாரப்படாது இயல்பாயிருக்கின்றது.

உ–ம்.:–

அவனே + கொண்டான் = அவனே கொண்டான்
சென்றான் = அவனே சென்றான்
தந்தான் = அவனே தந்தான்
பண்ணினான் = அவனே பண்ணினான்
அவனோ + கொண்டான் = அவனொ கொண்டான். பிறவு மன்ன

மேலே காட்டிய உதாரணங்கள் ஒகார இடைச்சொல்லுக்கு முபயோகமாகின்றன.

விதி 20

ஐ யீற்றுமொழிகள் வல்லினங்களைச் சந்திக்கையில் இச்சேர்க்கை அம் என்னுஞ்சாரியை இடையே யுண்டாக்குகின்றது. இந்த சாரியை வேற்றுமைக்கண் சிலவிடங்களில் ஐகாரத்தை யொழித்துத் தனித்துநிற்கின்றது.

உ –ம்.:–

புன்னை + கானல் = புன்னையங்கானல்
கொல்லை + சாரல் = கொல்லையஞ்சாரல்
கொன்றை + தீங்குழல் = கொன்றையந்தீங்குழல்
முல்லை + புறவம் = முல்லையம்புறவம்
வழுதுணை + காய் = வழுதுணங்காய்
ஆவிரை + பூ = ஆவிரம்பூ
ஆவிரை + வேர் = ஆவிரம்வேர்

RULE - XVIII

When the word பூ unites with hard letters க, ச, த, ப the connection brings in soft letters peculiar to each of the hard letters, as: Vein having flowers.
A grove flowers.
A tank flowers.
A field flowers.
– (Vide Soo. 50)

RULE - XIX

When the particles and ஏ connect ஓ with hard letters, the union is of ordinary kind without variation, as: He bought it himself.
He went himself.
He gave it himself.
He made it himself.
Did he buy it?

The foregoing examples are applicable to the particle ஏ also – (Vide Soo. 51)

RULE - XX

1. When the words ending in ஐ unite with hard consonants the connection, is made by the particle அம் in some places this particle alone remains, driving away the letter ஐ when it is in cases, as:
A grove of Poonny trees.
A field near to a hill.
A pipe made of Condry tree.
A garden of Moolly flowers.
Valootoony trees fruit or brinjal.
Flower of Awverem trees.
The root of " "

2. அல்வழிக்கண் சில அஃறிணைப்பெயர்கள் வல்லினத்தின் முன்னியல்பாகின்றன. உம்.

யானை + குறிது = யானைகுறிது
யானை + சிறிது = யானைசிறிது
யானை + தீது = யானை தீது
யானை + பெரிது = யானை பெரிது

விதி 21

1. வேற்றுமைக் கண்ணாவது அல்வழிக்கண்ணாவது பனை என்னும் மரப்பெயர் வன்கணத்துடன் சேருகையில் ஐகாரம் ன் என்னுமெய்யை விட்டுப் போகின்றது. பின்பு அம் என்னுஞ்சாரியைக் கொள்ளுகின்றது. **உம்.**

பனை + காய் = பனங்காய்
பனை + செதும்பு = பனஞ்செதும்பு
பனை + திரள் = பனந்திரள்
பனை + பழம் = பனம்பழம்

2. வேற்றுமைக்கண் பனை என்னுமொழி கொடி என்னுமொழியொடு கூடுகையில் அவற்றினிடையில் அச்சந்தியை வலுவாக்க க் என்னுமெய்யெழுத்து வருகின்றது. **உம்.**

பனை + கொடி = பனைக்கொடி

3. அதே வார்த்தையான பனை. மற்றொரு மொழியாகிய அட்டு என்பதுடன் சேருகிறபோது உயிரெழுத்தாகிய ஐகாரம் தான் ஏறியிருந்த ன் என்னுமெய்யை விட்டோடுகின்றது. அந்த ன் அடுத்த அகரயுயிரைப் பெற்று நீளுகின்றது. **உம்.**

பனை + அட்டு = பனாட்டு.

மூன்றாமதிகாரம்

மெய்யீற்றுச்சொற்கள் உயிரெழுத்தை முதலிலுடைய மொழிகளுடன் புணருவதையுணர்த்துகிற விதிகள்.

விதி 1

மெய்யெழுத்துக்களையடுத்து வருகிற மொழிகளின் முதலினிற்கிற உயிரெழுத்துக்கள் அம்மெய்யெழுத்துக்களின் மேலேறி முடியும் இது உயிரெழுத்துக்களுக்கும் மெய்யெழுத்துக் களுக்கும் இடையே தோன்றுகிற உடன்படு மெய்யென்று சொல்லப்படுகிற இயல்புப்புணர்ச்சியாம்.அஃதாவது,

உ–ம்;–

அவன் + அகம் = அவனகம்
அவன் + ஆக்கம் = அவனாக்கம்
அவன் + இட்டம் = அவனிட்டம்
அவன் + ஈகை = அவனீகை
அவன் + உடம்பு = அவனுடம்பு
அவன் + ஊக்கம் = அவனூக்கம்
அவன் + எண்ணம் = அவனெண்ணம்
அவன் +ஏடு = அவனேடு

2. When some nouns of Neuter Gender unite with hard letters, the union in phrases admitting of no cases has no variation, as:

The Elephant is short.

" small.

" bad.

" great. (Vide Soo.26 & 56)

RULE - XXI

1. When the word which is the name of a tree unites with hard letters in வேற்றுமை way or in the phrases admitting of cases, the vowel ஐ goes away leaving its body ன and it takes the particle அம் as:

Palmira fruit.

Palmira bark.

An assemblage of Palmira trees.

A fruit of a Palmira tree.

2. When the word பனை which admits of cases unites with the word கொடி a flag, a mute consonant comes, between them to make the connection as:

A flag representing a Plamira Tree.

3. When the same word பனை a joins another word அட்டு (Jaggery) the vowel goes away leaving its body ன which becomes long taking the next short vowel அ as:

Palmira Jaggery.-(Vide Soo.53)

CHAPTER - III

The Rules under which the words which end in mute Consonants unite with those beginning with vowels.

RULE - I

The vowels which are in the beginning of the words following the Mute Consonants get over them as their bodies and this is called the ordinary conjunction between the vowels and consonants. Namely,

His house.

His fortune.

His pleasure.

His grant.

His body.

His happiness or joys.

His thought.

His page.

அவன் + ஐயம் = அவனையம்
அவன் + ஒக்கல் = அவனொக்கல்
அவன் + ஓசை = அவனோசை
அவன் + ஔவியம் = அவனௌவியன்

விதி – 2

தனிக்குற்றெழுத்துக்களுக்கு அல்லது மெய்யெழுத்துக் களுக்கு அடுத்து நிற்கிறவொற்றுககள் வருமொழி முதலினிற்கிற வுயிரெழுத்துடன் கூடும்புணர்ச்சி அவ்வொற்றுக்களை யிரட்டிக்கச்செய்து முடிகின்றது. **உ–ம்.**

மண் + அரிது = மண்ணரிது
மண் + அகம் = மண்ணகம்
மண் + ஒளி = மண்ணொளி
பொன் + அரிது = பொன்னரிது
பொன் + அகம் = பொன்னகம்
பொன் + ஒளி = பொன்னொளி

மற்றவைகளுமிப்படியே.

விதி – 3

யகரமொழித்த மற்றையீறுகளையுடைய நிலைமொழிகளுடன் ய யா என்னும் வினாச்சொல் செருகையில் அப்புணர்ச்சி அவைகளுக்கு இடையில் இகரத்தையுண்டாக்கும். **உ–ம்.**

மண் மண்ணியாது
பொன் பொன்னியாது
வேர் வேரியாது
வீழ் வீழியாது

விதி – 4

ஞ், ண், ந், ம், ல், வ், ள், ன் என்னுமீற்றையுடைய தொழிற்பெயரும் சில ஏவல் வினைகளும் யகரமொழிந்த மற்ற மெய்களுடன் புணருகையில் உகரச்சாரியையைப் பெறுகின்றன. சில ஏவல்வினைகளோ சிலவிடங்களில் இவ்வாறு பெறா. **உ–ம்.**

உரிஞ் + கடிது = உரிஞுக்கடிது
உண் + கடிது = உண்ணுக்கடிது
பொருந் + கடிது = பொருநுக்கடிது
உரும் + கடிது = உருமுக்கடிது
சொல் + கடிது = சொல்லுக்கடிது
தெவ் + கடிது = தெவ்வுக்கடிது
புள் + கடிது = புள்ளுக்கடிது
மின் + கடிது = மின்னுக்கடிது
உரிஞ் + நீண்டது = உரிஞு நீண்டது
உரிஞ் + வலிது = உரிஞுவலிது

இஃது வேற்றுமைச்சந்தியில்

உரிஞ் + கடுமை = உழிஞுகடுமை
உரிஞ் + நீட்சி = உரிஞுநீட்சி
உரிஞ் + வன்மை = உரிஞுவன்மை

இவ்வாறு தொழிற்பெயர்கள் இருவகையிலும் உகரச்சாரியைபெற்றன.

His fear or doubt.
His relation.
His voice.
He is a malicious man.-(Vide Soo.1.)

RULE - II

The connection of the route consonants which stand next to short single letters or consonants with the vowels which in the next words follow them for union, renders the route consonants doubled; as:

The ground is scarce.
Terrestrial world.
The brightness of the earth.
The gold is scarce.
The gold world, or celestigal globe or world.
The brightness of the Gold.
The rest of the union are of the same kind.

RULE - III

